பதிவு எண் M. 4900.

16-பக்கங்கள்.

# குடி அரசு

நிறுவியது: 1924.

உள்நாடு வருட சந்தா ரூ. 7-0-0. தனிப்பிரதி 0-2-0.
வெளிநாடு ,, ரூ. 9-0-0. ,, 0-2-6.

மாலை 23 } ஈரோடு 17-9-1949 சனிக்கிழமை } மலர் 2.

# தர்மராஜ்யத்தில்

## — ஒரு கனவு —

★

தர்மராஜ்ய பூபதி, ராமராஜ, கிருஷ்ணதேவ, மஹாவீர, புஷ்பமித்ரவர்மன், ஆடையாபரண அலங்கிருதனாய், அப்ஸர ஸ்திரீகள் முன்செல்ல, நாற்படைகள் அணிவகுத்து நிற்க, வேதப் பிராமணர் ஆசிகூற, பல சிற்றரசர்கள் புடைசூழ, தர்பார் மண்டபத்தில் பிரவேசித்தார். சபையில் இருந்த எல்லோரும் எழுந்து நின்று நமஸ்கரித்து, ஜயவிஜயீபவ! ஜயவிஜயீபவ!! ஜயவிஜயீபவ!!! என்று ஜயகோஷஞ் செய்தனர். இரத்தினங்கள் ஒளிவீச ஒய்யார நடை நடந்து அரசன் சிங்காதனத்திலமர்ந்தனன்.

மந்திரிகள்:- வந்தனந்தந்தோம் மஹாராஜ்!

அரசன்:- கல்யாண்! கல்யாண் மந்திரிகளே!

மந்:- ராஜபூபதி! நமது தர்மராஜ்யம் ஸ்தாபனமாகி இன்றைக்கு இரண்டு தினங்களாகின்றன. நேற்றைய தர்பாரில் அரசியல் விஷயங்களைக் கவனிக்கப் போதிய நேரமில்லாததால், பரத நாட்டிய விமர்சனத்தோடு தர்பார் கலைந்தது. இன்றைய தர்பாரில், தங்கள் முன்னிலையில் சங்கீதம், பரத நாட்டியம் இவ்விரண்டு கலைகளிலும் தேர்ச்சி பெற்ற பாரசீக நாட்டுப் பெண்மணி ஒருத்தியும், காஷ்மீர் நாட்டுக் கன்னியர் இருவரும் தங்கள் கலைத்திறமைகளைக் காட்ட ஆவலோடு தங்கள் உத்திரவை எதிர்பார்த்திருக்கிறார்கள். அரசாங்க விஷயங்கள்சில அவசரமாகக் கவனிக்கப்பட வேண்டியிருக்கின்றன. தங்கள் இஷ்டம் எதுவோ தெரிவிக்க வேண்டுகிறோம்.

அர:- பிரதானீ! நமது குடிபடைகளின் கலைத்தேர்ச்சியைக் கவனித்துச் சன்மானிப்பதும் நமது கடமையல்லவா? அரசகாரியங்களில் சேர்ந்ததல்லவா? ஆகையால் முதலில் சங்கீத, நாட்டிய விற்பன்னிகளின் பயிற்சி நடக்கட்டும்.

ஆஸ்தான ஆச்சார்யஸ்வாமிகள் குறுக்கிட்டு,

“அரசே! நான் சொல்வதைக் கவனியும்! நம்முடைய தர்மராஜ்யம் இன்னும் வலுப்பெறவில்லை. ஆரம்பத்திலேயே, அரசன் தேசகாரியங்களைக் கவனியாமல், ஆடல் பாடல்களிற் காலங்களிக்கிறான் என்று ஜனங்கள் சொல்ல இடந்தரலாகாது. மேலும் நம்முடைய தர்மராஜ்யத்திற்கு ஆரம்பகாலத்தில் பல விரோதிகள் இருக்கிறார்கள். அவர்களையெல்லாம் ஒழித்து ராஜ்யத்தைப் பலப்படுத்துவதுமுதல் கடமை. இது விஷயமாக உள்நாட்டு மந்திரியார் தேசத்தின் பல மாகாணங்களிலிருந்து விசேஷ வர்த்தமானங்களையறிந்து சில திட்டங்களைச் சமூகத்தில் சமர்ப்பித்து அங்கீகாரம் பெறக்காத்திருக்கிறார். ஆகையால், முதலில் வழக்கம்போல் தேசவிசாரணை செய்து நீதி செலுத்திப் பின் ஆடல்பாடல்களைக் கவனிக்கலாம்”

அர:- குருமகாராஜ்! தங்களிஷ்டம் போல் நடக்கின்றேன். பிரதான்! நமது தேசத்தில் மாதமும் மாரிபெய்து குடிஜனங்களிட்ட பயிர்கள் தழைத்தோங்கி க்ஷேமமாயிருக்கின்றனரா?

மந்:- அரசே! வருணபகவானது அனுக்கிரகத்தால் மாதமழை குறைவின்றிப் பெய்கின்றது. குடிகள் யாதொரு குறைவுமின்றி வாழ்கின்றனர்.

அர:- தேவாலயங்களில் திரிகால பூஜைகள் தினந்தோறும் தவறாமல் நடக்கின்றனவா?

மந்:- நாட்டிலுள்ள சர்வதேவாலயங்களிலும் காலமுறை தவறாமல் பூஜைகள் நடந்து வருகின்றன.

அர:- வேதப்பிராமணர் வேதாகமங்களை ஓதிவருகின்றனரா? அவர் செய்ய வேண்டிய, யாகயெக்ஞாதிகள் யாதொரு இடையூறின்றி, நடத்தப்படுகின்றனவா?

மந்:- அரசே தங்களது ஆக்ஞா சக்கரத்தின் கீழ், அந்தணர்கள் யாதொரு குறையும் இன்றி யாகயெக்ஞங்களைச் செய்துகொண்டும், வேதமோதிக்கொண்டும் வருகின்றனர். இவ்விஷயத்தில் நாங்கள் சர்வ ஜாக்கிரதையாக நடந்து வருகிறோம்.

அர:- சிற்றரசர்கள் தாங்கள்

(தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க)

# — கன்பூஷியஸ் —

★

நாட்டிலே குழப்பமும் குரோத எண்ணமும் தாண்டவமாடின. சட்டத்திற்கு அடங்கி நடப்பது துச்சமாகக் கருதப்பட்டது. மக்களிடையே மூடநம்பிக்கை தலைவிரித்தாடியது. கடவுளின் பெயரால் பூசாரிகள் பணம் சம்பாதித்தார்கள். இரத்தப் பலி கொடுத்து மக்கள் கடவுளை வணங்கினர்-மேலே சித்திரிக்கப்பட்டிருப்பது கி. மு. ஆறாம் நூற்றாண்டில் சீனா இருந்த நிலைமையாகும். அதாவது சற்றேறக் குறைய இன்றைய தமிழ் நாட்டின் நிலையைப்போல் இருந்ததென்று சொல்லலாம். இன்று எவ்வாறு தமிழ் நாட்டின் முன்னேற்றத்திற்கு ஒரு பெரியார் ராமசாமி கிடைத்தாரோ, அதேபோல் பழமைப் படுகுழியில் மூழ்கிக்கிடந்த சீன நாட்டைத் திருத்துவதற்கு அன்று ஒரு கன்பூஷியஸ் கிடைத்தான்.

கிரேக்க நாட்டுப் பேரறிஞன் சாக்கரட்டீஸ் மக்களிடையே அறிவுணர்ச்சியைத் தூண்டுவதற்காக வீடுகள்தோறும் விருந்துகள்தோறும் வீதிகள்தோறும் சென்று பொதுமக்களிடையே தன் கொள்கைகளை எடுத்துச் சொல்லி வாதப் பிரதிவாதம் செய்து வெற்றி கண்டான் என்பதை நாம் கேட்டிருக்கிறோம். அதேபோல் கன்பூஷிபஸ் ஒரு நல்ல அரசாங்கத்தையும், அந்த அரசாங்கத்தைப் பேணிக் காப்பாற்றும் ஒரு கட்டுப்பாடான நல்ல மக்கள் சமுதாயத்தையும் உருவாக்குவதற்காக சீன நாட்டிலுள்ள சமஸ்தானங்கள்தோறும் சென்று, தன் கொள்கைகளை வலியுறுத்தி சண்டமாருதப் பிரசாரம் செய்தான். தன்னுடைய கொள்கைகளைப் பின்பற்றி ஒருமன்னனாவது நாட்டிலே ஆட்சி செய்ய வேண்டுமென்று நினைத்தான். ஆனால் அந்தோ! அவன் வாயாலேயே தன்னுடைய பரிதாப நிலையைச் சொல்லுகின்றான்! கேளுங்கள்! என்னைப் பின்பற்றி நடக்க ஒரு புத்தியுள்ள அரசன்கூட வரவில்லையே. என்னுடைய காலம் வீணாகச் சாகடிக்கப்படுகின்றதே'' என்று உள்ளமுடைந்து கூறுகின்றான்.

கன்பூஷியஸ், மாத்யூ அர்னால்டைப்போல் மூலையில்உட்கார்ந்து கொண்டு கையாலாகாத சாக்குருவி வேதாந்தம் பேசி காலத்தைக் கழிக்கவில்லை. மக்கள் சமுதாயத்திலே ஒருவருக்கொருவர் உறவு மனப்பான்மையும், நேசப்பான்மையும் உண்டாகும் வகையில்தன்னுடைய ஒழுக்கத் தத்துவத்தை அமைத்து மக்களிடையே சொன்னான். தகப்பனுக்கும் மகனுக்கும் உள்ள உறவு, கணவனுக்கும் மனைவிக்கும் உள்ள ஒரு கூட்டுப் பிணைப்பு, பெரியவர்களுக்கும் இளைஞர்களுக்கும் உள்ள ஒரு தன்மை, நண்பனுக்கும் நண்பனுக்கும் இடையேயுள்ள ஒரு நட்புரிமை ஆகிய இயற்கை உண்மைகளுக்கு நாம் மாறுபடக் கூடாது என்று எடுத்து இயம்பினான்.

கன்பூஷியஸ் கடவுளைப்பற்றிக் கவலைப்பட்டதாகவே தெரியவில்லை. அதாவது "காணமுடியாத ஒன்றை வைத்துக் கொண்டு, அதற்குத் துதிபாடுவது தவறு என்பது அவனுடைய எண்ணம் போலும். ஆனால் அவன் 'தாய் தந்தையைத்' தான் கடவுளாகக் காண ஆசைப்படுகிறான். அதை வெகு அழகாக "நாம் நமது பெற்றோர்களிடமிருந்து உதித்தவர்கள். ஆகையால் இந்தப் பிறப்பைத் தந்த நம் தாய் தந்தையர்க்கு நாம் மிகவும் கடமைப் பட்டவர்களாவோம். இதனால் நாம் நமது பெற்றோர்களை முதலில் மனதில் நினைத்தே எந்தக் காரியத்தையும் செய்ய இறங்க வேண்டும். நாம் நமது பெற்றோர்களுக்குத் தரும் மதிப்பானது, மற்ற மதங்களில் உருவ வடிவத்தில் இருக்கும் கடவுளுக்குச் செய்யும் உபசாரத்தை விட மிக மிகச் சிறந்ததும் தலையாயதுமாகும்'' என்று சித்திரிக்கின்றான். கன்பூஷியசின் இந்தப் புரட்சிகரமான கொள்கையைக் கண்டு ஏராளமான மக்கள் அவரைப்பின்பற்ற ஆரம்பித்தார்கள். சீனாவிலுள்ள டாயிஸ்டுமதத்தைச் சேர்ந்தவர்களிலிருந்தும், புத்தமதத்தைச் சேர்ந்தவர்களிலிருந்தும், கன்பூஷியசைப் பின்பற்றியவர்கள் வேறுபட்டிருந்ததால்இவர்கள் தங்களை (Ju)என்ற அழைத்துக் கொண்டார்கள். கடவுள் நம்பிக்கையற்ற கன்பூஷியானிசம் (Confucianism) என்ற மதத்தையும் தங்களின் ஒற்றுமை வாழ்வுக்காக ஸ்தாபித்துக் கொண்டார்கள். இந்தவகையில் கன்பூஷியசைப் பெருமைப் படுத்தினார்கள். தவிரவும் கன்பூஷியசை சீனா நாட்டுச் சரித்திரத்தின் தந்தையென்றும் பெருமையோடு அழைத்துக் கொண்டார்கள்.

கன்பூஷியஸ் அரசியல் விவகாரங்களிலும் முக்யத்வம் எடுத்துக் கொண்டான். தனிப்பட்ட முதலாளிகளும், தனிப்பட்டகம்பெனிகளும் பொருள்களுக்கு விலைநிர்ணயிப்பதைப் பலமாக எதிர்த்தான். அரசாங்கமே நாட்டிலுள்ள விற்பனைப் பொருள்கள் அனைத்துக்கும் விலை நிர்ணயிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தினான். அரசாங்கத்தின் செலவில் தாய்தந்தையற்ற, அனாதைக் குழந்தைகளைப் பேணிவளர்க்க வேண்டுமென்றும், தனிப்பட்ட முதலாளிகளிடமிருந்து பணம் வசூலித்து வேலை செய்ய முடியாத நிலையில் இருக்கும் கிழவர்களைப் பராமரிக்க வேண்டுமென்றும் எடுத்துச் சொன்னான்.

கன்பூஷியஸ் தன்னுடைய கொள்கைகளிலே, மூன்றை மிகவும் புனிதத் தன்மைவாய்ந்ததாகக் கருதினான். முதலாவதாக தன் சொந்த முயற்சியாலும், செய்கையாலும், தன் பெற்றோருக்குப் பெருமை தேடித்தரவேண்டும். இரண்டாவதாக அவர்களின் பெருமைக்கு இழுக்கு வராமல் செய்ய வேண்டும். மூன்றாவதாக அவர்களுக்கு நல்ல ஆதரவும், வசதியும் செய்து கொடுக்கவேண்டும். இந்த மூன்று புனிதக் கொள்கைகளைக் கைப்பிடிப்பவனே உண்மையான கடவுள் பக்தன், தொண்டன், மக்களின் நண்பன் என்று கருதப்பட்டான். ஹான்யூ (Hanyu) என்னும் பிரபல எழுத்தாளன் கன்பூஷியசின் புரட்சிகரமான கொள்கைகளைக் கண்டு வியந்து, "அவன் தன்னுடைய திறமையால் எல்லா மதக் குருமார்களையும், கன்னிகாஸ்திரிகளையும், வேடத்தைக் கலைத்து விட்டு வாழ்க்கையில் இறங்கும்படி தூண்டினான். மதப் புத்தகங்களை எரிக்கவும், மடங்களையும், கோயில்களையும் மக்கள்

உரிமை] [ஆசிரியருக்கே

# தொல்காப்பியப் பொருளதிகார விளக்கம்.

—(புலவர் குழந்தை)—

தமிழ்த் துறவிகளாகிய அந்தணர் மிகுதியாக ஓரிடத்தில் நிலையாகத் தங்கியிராமல் ஊர் தோறும் சென்று மக்களை நன்னெறிக்கண் செலுத்தி வந்தனர். ஆகவே, வெயிலுக்காகக் குடையும், செருப்பும், நீர் மொண்டு கொள்ளச் செம்பும், வழிச் செலவுக்குத் துணையாக ஊன்றுகோலும், தங்குமிடத்தில் விரித்துக் கொள்ள விரிப்பும், பழந் தமிழ் நூல்களும் உடையராயிருந்தனர். அரசர் போர் முதலியவற்றிற்காக வெளியில் சென்ற போது அந்தணரும் அரசியலை நடத்தி வருவர்.

வணிகர் பொருள் வாணிகம், கால் நடை வாணிகம், கூல வாணிகம் முதலிய எல்லாவகை வாணிகமும் செய்வர். கூலம் — கம்பு சோளம் முதலிய தவசங்களும், அவரை துவரை முதலிய பயிறுகளும். வேளாளர்க்கு உழவே முதன்மையான தொழிலாகும்.

அய்யர் —: உரை யாசிரியர்கள் அந்தணர், அய்யர், பார்ப்பார் என்னும் மூன்று பெயரும் ஆரிய முதற் குலத்தாரைக் குறிப்பதாகக் கொண்டு உரை யெழுதித் தமிழ் மரபை யறிய முடியாது செய்து விட்டனர். ஆதலால், அய்யர், பார்ப்பார் என்னும் பெயர்களை ஆராய்தல் இவ் வாராய்ச்சிக்குப் பயனுடையதாகும்.

அய்யர் என்பது அய்யன் என்னும் ஆண்பால் பெயரின் பன்மையாகும். அய் + அன் — அய்யன். இது 'அய்' என்னும் பகுதிபடியாகப் பிறந்த பெயர். அய் என்பது வியப்புப் பொருள் குறிக்கும் ஓர் உரிச் சொல். வியக்கத் தக்க பொருள் கண்டவிடத்து 'அய்' என்பது தமிழர்க்கு, சிறப்பாகச் சிறுவர்க்கு இயல்பு. "அய்வியப் பாகும்" (உரி—87) அய்யன்—வியக்கத் தக்க பெரியோன்.

அய்யன் என்னும் பெயர் நாட்டுப் புறத் தமிழரிடைப் பாட்டனுக்கும், சிறுபான்மை தந்தைக்கும் வழங்கி வருகிறது. 'அய்யை' என்பது பெண்பால். இது 'ஆயா' என மருவிப் பாட்டிக்கு வழங்கி வருகிறது. 'அய்யா' என்னும் ஆண்பால் விளியின் வேறுபாடறியவே ஆயா எனத் திரித்திருக்கின்றனர். சிறு குழந்தை 'ஆயா' எனச் செல்லமாக அழைக்கும் வழக்கமும் உள்ளது. பொதுவாக எல்லாப் பாட்டிகளையும் ஆயா எனவே, அழைத்து வருகின்றனர். பல இடங்களில் குயவர், தச்சர், கொல்லர், ஒட்டர் முதலிய வகுப்பினர் வேளாளர்களை அய்யா எனவும் வேளாளப் பெண்களை ஆயா எனவும் அழைத்து வருகின்றனர். தமிழர்களில் பெரும்பாலார் இன்றும் தங்கள் மாமன், மைத்துனர் முதலிய உறவினர் வந்தால், 'வாருங்கள் அய்ய' என்றே வரவேற்கின்றனர். தன் + அய் — தன்னை — அண்ணன். "தந்தை தன்னை" (செய்-191) இங்கும் 'அய்' பெருமை குறித்தல் காண்க.

முன்னர் ஆசிரியர்களை அய்யர் எனவே அழைத்து வந்தனர். ஆசிரியர் எந்த வகுப்பினரா யிருந்தாலும் அய்யர் என்று தான் அழைப்பது வழக்கம். இன்றும் ஊரகங்களில் உள்ள ஆசிரியர்களை அய்யர் என்று தான் அழைக்கின்றனர். பொதுவாக அய்யர் என்னும் பெயர் ஆங்கில 'சார்' என்னும் சொல்லின் பொருளை யுடையதாகும். தன்னிற் பெரியாரெல்லாம் அய்யர் ஆவர். பாட்டனை அய்யா என்பது பெரு வழக்காகவும், தந்தையை அய்யா என்பது சிறு வழக்காகவும் உள்ளது. தொல்காப்பியர் பெரியார் என்னும் பொருளிலேயே அய்யர் என்னும் சொல்லை வழங்குகிறார்.

"அய்யர் யாத்தனர்" (கற்—4)
"அய்யர் பாங்கினும்" (கற்—5)

எனக் காண்க. இரப்போர் ஈவோரை நோக்கி 'அய்யா அய்யா' ஒரு காசு கொடுங்கள் என்பதும் பெருமை குறிப்பதே யாகும்.

பிறரால் துன்புறுத்தப் படுவோர் 'அய்யோ' என்று கூவுதல் பெருவழக்கம். அய்யன் என்பதன் விளிப் பெயர் அய்ய. அய்யா— சேய்மை விளி. மாமன், மாம, மாமா, மாமோ என்பது போல், 'அய்யோ' என்பது நெடுஞ் சேய்மை விளி, இது தன்னைக் காத்தற்காகப் பெரியோரை அழைத்தலே யாகும். துணை யில்லாதார் தம் இடுக்கண் தீர்க்கத் தம்மிற் பெரியாரைக் கூவி யழைப்பர். ஒருவரும் வந்து உதவாவிடின் இரங்குவர். அதனால், அய்யோ என்னும் சேய்மை விளிப் பெயர் பின்னர் இரக்கம் குறிக்கும் பெயராயிற்று. சுற்றத்தாரையோ, பொருளையோ இழந்தோர் அய்யோ என்று அழலாயினர். ஒருவரை யாராவது அடித்து விட்டால் அது கண்ட

(தொடர்ச்சி 13-ம் பக்கம்)

---

வசிக்குமிடமாக ஆக்கவும் முயற்சி செய்தான்" என்று கூறுகின்றான்.

2500-ஆண்டுகட்குமுன் இவ்வளவு புரட்சிகரமான கொள்கைகளை எடுத்துக்கூறிய அந்த சீன நாட்டுப் பேரறிஞனை வாயார வாழ்த்திப் போற்றுவது நமது கடமையாகும். அவரைப் போல், இன்றைய தமிழ் நாட்டில் காலத்துக் கேற்ற பல புதுமைக் கருத்துக்களை எடுத்துக் கூறும் ஒரு புரட்சிக்காரர், ஒரு புதுயுகச்சிற்பி, ஒரு கன்பூஷிபஸ், நம்மிடையே உலவுகிறார். அவரைப் பயன் படுத்திக் கொள்ள வேண்டியது ஒவ்வொரு தமிழனுடைய தலையாய கடமையுமாகும். அவ்வாறு செய்யுமுகத்தான் நாம் அன்றைய கன்பூஷியசைப் பெருமைப்படுத்தினவர்களாவோம். வாழ்க கன்பூஷியசம்! வாழ்க பெரியாரிசம்!

—எஸ். பி. சண்முகம்.

ரோஜா முத்தையா

# மனிதனே தான்!

★

“ஏண்டா! தடிப்பயலே! நேத்துதானேடா உன்னை அவுத்துவுட்டோம். அதுக்குள்ளே ஏண்டா மறுபடியும் வந்துட்டே” போலீஸ் இன்ஸ்பெக்டர் பொன்னம்பலம் பேசினார், எக்களிப்பு கொப்பளிக்க — அதிகாரமிடுக்குடன் அந்த இளைஞன்—ஆம்! அவர் அருகில் நின்ற அந்தக் கைதி—மௌனத்தினைத் துணையெனக் கொண்டான்.

“சார்! அவனுக்கு இதைவிட்டுப் போக மனசில்லை போலிருக்கு சார்!” விளக்கமளித்தார் அதட்டிப் பிழைக்கும் ஆசாமி நெ. 54. ஏகாந்த எண்ணத்திலே இருந்த அந்த இளைஞனின் கண்களிலிருந்து இரண்டு நீர்த்துளிகள்—வெறும் நீர்த் துளிகளா அவை? இப்பாழும் மனித சமுதாயத்தில் வாழ்வதற்காகப் போராடியதில் அவன் பெற்ற பலனைப் பிரதிபலிக்கும் கண்ணாடிகள் அவை—தரையில் விழுந்தது. மாயக் கண்ணீர் என்று மட்டந்தட்டியது மட்டுமல்ல, அவனது தலையிலும் ஒரு தட்டுத்தட்டி உள்ளே அனுப்பினார் பொன்னம்பலம். கேட்ட கேள்விக்கு தன் கண்ணீரையே விடையெனச் சிந்தி சிறை சென்ற அந்த இளைஞன்..........

* *

ஒடுக்கப்பட்ட மக்கட் கூட்டத்திலே பிறந்த உத்தமன், நாட்டிற்குரியவரின் குடியில் உதித்தவன்தான். ஆனால் நயவஞ்சகரின் சூழ்ச்சியால் நலிவு பெற்று வாழநேர்ந்தது. தற்போது அவனது தாய்—தனிமைதான்! தந்தை—காருண்யமிக்க சர்க்காரின் கண்காணிப்பிலே உள்ள சிறைக்கூடம்தான்! உற்றார் உறவினர்—சிறைச்சிப்பந்திகள், கண்ணிற் கண்டோர்! இன்பம்—எட்டாப்பொருள் மட்டுமல்ல—தொட்டதே கிடையாது. இளமை—அவனுக்குத் தேவையேயற்ற ஒன்று. அவன் கண்ட உயர்ந்த உணவு—உப்பில்லாக் கூழ். உடை—கந்தையான 4முழம் அழுக்கு வேட்டி. அவனது வாழ்வு—

அவன் தாய் மாரியாத்தா ஏழுமாத கர்ப்பிணியாக இருந்தபோதே அவன் அப்பன் இருளப்பன் அம்மை வார்த்து முற்றியதால் “பராசக்தியின் பாதாரவிந்தங்களிலே” சேர்த்துக் கொள்ளப்பட்டான். அதன்பின் அவன் தாய்—உழைப்பதற்கென்றே பிறந்த கூட்டத்தினள்—எவ்வளவோ பாடுபட்டாள் உயிர்வாழ. கடும் வெயிலிலே கீழே கால் வைக்க முடியாத நேரத்திலே தட்டுத் தூக்கி தாங்க முடியாத சுமைகளையும் தள்ளாடித் தூக்கி வயிறு வளர்த்தாள். எத்தனையோ இரவுகள் அவளுக்கு ‘ஏகாதசி விரதங்களாய்’ இருந்துள்ளன. புளியமரத்தடிகள், சாலை ஓரங்கள் அவளது சயன மண்டபங்களாய் இருந்தன. குளிர் காலத்திலே ‘கையது கொண்டு மெய்யது பொத்தி, காலது கொண்டு மேலது தழுவி’ காலம் கடத்தியிருக்கிறாள்.

உலகிலே ஒன்றே ஒன்று தன் செயலை ஒழுங்குபட செய்கிறது என்றால் அது காலத்தைத் தவிர வேறு எதுவாயிருக்க முடியும்?... இந்நிலையிலே மூன்று மாதங்கள் முடிந்தன மாரியாத்தாள் ‘வேதனை’ கொண்டாள். ‘அந்தக் கடவுள்கூட, அருளாத உதவியை அவ்வூர் ஆஸ்பத்திரியினர் அருளி அவளையும் கருப்பனையும்—இன்றைய கைதி—பிரித்துக் காத்தனர். சிகிச்சை பெற்றபின் வெளியே அனுப்பப்பட்ட மாரியாத்தா உழைக்க போதிய உரமற்றவளானாள். எனவே, வேலை தேடும் எண்ணத்தை விடுத்தாள். எவ்வளவோ கத்தினாலும் தன் காரியம் பலிக்காவிட்டால் தன் மானத்தை விட்டுக் கொடுத்துவிட்டு சிறு குழந்தைகள் பேசாமல் இருந்து விடுவதில்லையா? மாரியாயியும் வேறு வழியின்றி இரந்து வாழத்துவங்கி, இறுதியில் அதையே தன் வாழ்வெனக் கொண்டுவிட்டாள். என் செய்வாள்? பாபம்!

“இருக்க இருக்க இந்தப் பிச்சைக்காரனுங்கதான் பெருகிட்றானுங்க” என்று ‘பழம்’ பிச்சைக்காரர்கள் பலர் தங்கள் ‘வாடிக்கை’க்கு முந்திக் கொண்டு விடுவார்கள். போதாதற்கு உணவுப் பஞ்சம் வேறு கேட்கவேண்டுமா? காலையில்—ஒன்றுமில்லை. மத்தியானம் அரைவயிறு. இரவு நேரம்—வெறும் தண்ணீர்—இவை அவளது ‘டைரி’யிலே திருப்பித் திருப்பிப் பதிக்கப்பட்ட குறிப்புகள். ஒன்பது தெருவு சுற்றினால் ஒரு கவளம் உண்டு. இன்னும் கொஞ்சம் சுற்றினால் அதிகம் கிடைத்தாலும் கிடைக்கலாம். பல நாட்களில் கால்வலி தாங்காமல் பேசாமலேயே இருந்து விடுவாள். வாய்வைத்து இழுத்தும் ஒன்றுமே வராது கத்திக் கத்தியே பசியைத் தீர்த்துக் கொள்வதில் நல்ல அனுபவம் உண்டு குழந்தை கருப்பனுக்கு

காலம் கடந்தது. 15-ஆண்டுகள் பறந்தோடின. குழந்தை கருப்பையா இளைஞனானான். ‘பரம்பரைத்’ தொழிலான கூலிதூக்கிக் கால் வயிறு, கையேந்தி கால்வயறு என்றிருந்தது அவன் வாழ்வு. இந்த சமயத்திலே தான் ‘பராசக்தி’ அந்த ஊரிலே கோரத் தாண்டவமாடி காலராத் தூதனைக் கொண்டு கணக்கற்ற மக்களைத் தன் காலடியில் சேர்த்துக் கொள்ளத் துவங்கினாள். மாரியாயியும் அதற்கு இலக்காக மாறினாள்-உணவு காணாத உடல் நோய் பிடிக்க மிகஎளிதாயிற்று-ஒரு வாரம் நோயுடன் போராடினாள். அவளது எலும்புகளும் தோலும் ஒன்றையொன்று போட்டியிட்டுக் கொண்டு “என் அழகைப் பார்!” என்று கூறாமற்கூறின.

எங்காவது அலைந்து திரிந்து முயலும்போதே அரை வயிற்று உணவு உண்ட அவர்களுக்கு, உட்கார்ந்து கொண்டிருக்கும்போது எப்படி இருக்கும்? கருப்பையாவின் இளம் உள்ளம் எண்ணப் போராட்டத்திலே அமிழ்ந்தது—பெற்றெடுத்த தாய்க்கு நான் பயன்பட மாட்டேனா? பதினாறு ஆண்டுகள் என்னை வளர்த்துவிட்டிருக்கிறாளே, அதன் பலன் என்ன? சாவின் கோரப்பிடியிலே சிக்கி இருக்கிறாள் அவள். நோயைப் போக்கவோ வழியில்லை—முடியாது. இப்பொழுதோ அல்லது அடுத்த வினாடியோ என்றிருக்கும் அவளுக்கு முழுவயிறு உணவாவது கொடுக்கக்கூடாதா?—எழுந்தான். ஓடினான் தெருத்தெருவாக. நேரம் கடந்துவிட்டது. கால் வலியைத் தவிர வேறொன்றுமில்லை. கூலி தேடவும் முயன்றான். கூப்பிடுவாரில்லை.

“மனிதர்களாம்! மட்டரகங்கள்! உறவு கலந்துண்ணும் காக்கையின் அந்த அறிவுகூட அற்றவர்கள். உயர்ந்தவர்களாம்! தங்கள் இனத்திலே ஒருயிரை அநியாயமாய் இழக்க உடன்படும் உன்மத்தர்கள்! சீ! மாக்களைவிடக் கேவலமான மக்களே!” என்று கூறிவிட்டுத்தானோ என்னவோ கோபம் கொப்பளிக்க சென்று மறைந்தான் செங்கதிரோன். கால் நரம்புகள் ஒன்றோடொன்று இழுத்துப் பிடித்துக் கொண்டு ‘ஒத்துழையாமை இயக்கம்’ நடத்த அதை எதிர்த்துத் தீவிரப் போராட்டமாடிக் கொண்டே நடந்தான் கருப்பையா. இடும்பைகூர் வயிறு இழுத்துப்பிடிக்க—தாய் என்ன ஆனாளோ என்ற எண்ணம் சித்திரவதை செய்ய—தள்ளாடி வந்தான். அய்யகோ! அந்நிலையில் அவன் இளைஞனாகவா தோன்றினான்?

பளிச்சென்று அவன் முகத்திலே மகிழ்ச்சி தாண்டவமாடியது. அமெரிக்காவை கொலம்பஸ் கண்டுபிடித்த நிலையிலே விரைந்தான், அந்த ஊர்முதலாளி முனுசாமி முதலியார்—காச நோயால் உடலிளைத்து ஒல்லியாக இன்றோ நாளையோ என்றிருந்தவர்—பணக்காரர்—அவரின் வீடு நோக்கி நடந்தான்.

(தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க)

# சட்டம் வருகிறது சட்டம்!

★

சட்டம் வருகிறது சட்டம்!—
நம்மை
சாய்த்து மடித்திட சதிகாரர்
வீசிடும்—அடக்குமுறை
சட்டம் வருகிறது சட்டம்!

என்று 'லாலி' பாடிக்கொண்டே வந்து என் முதுகில் ஒரு தட்டு தட்டினான் நண்பன் மாணிக்கம். அவன் தன்னை ஒரு கவிஞன் என்று கருதிக் கொண்டு கொஞ்சம் கர்வமாகவே நடப்பவன். எதற்கெடுத்தாலும் உடனே கவி கட்டி விடுவது அவனுக்கு வழக்கம். அவ்வளவும் புதிய சொந்த சரக்காகவேதான் இருக்கும். எனினும் அவனது கவிதைகள் பத்திரிகைகளில் இடம்பெற முடிவதில்லை. காரணம் அவன் கத்திரிக்கோல் வேலை செய்யாது சொந்த சரக்கையே உபயோகிப்பதுதான். இந்தப் பாழும் பத்திரிகை உலகம் ரொம்ப மோசமானது. சுயமாகச் சிந்தித்து எழுதும் உண்மை எழுத்தாளனுக்கு இடம் கிடைப்பதில்லை. பிறருடையவோ, அல்லது மற்ற மொழிகளில் இருப்பவைகளையோ திருடி தன்னுடையதென்று டாம்பீகத்தோடு வெளியிடும் "மாரீசன்"களுக்குத்தான் மதிப்பும் கௌரவமும் கிடைத்திருக்கிறது என்று என்னிடம் அடிக்கடி கூறி வருத்தப்படுவான். இதற்கு நான் என்ன செய்ய முடியும்? ஒரு சில வேளைகளில் இதற்குப் பெயர்தான் "தமிழ் மறுமலர்ச்சி எழுத்தாளர் உலகம்" என்று கூறுவேன்.

எப்பொழுது என்னைத் தேடி வந்தாலும் ஏதாவது புதிய விஷயத்தைச் சேகரித்துக் கொண்டு வந்து வம்பு பேசிவிட்டு போவது அவனுக்கு வழக்கம். ஏதோ செல்லமாக முதுகில் தட்டுவதாக நினைத்துக் கொள்பவன் இந்த முறை ஓங்கி தட்டிவிடவே, அது எனக்கு சுளீரென்று பட்டதினால் அவனைத் திரும்பி ஒரு மாதிரியாகப் பார்த்துவிட்டு மீண்டும் எழுத ஆரம்பித்தேன். நான் அவனை மதித்து வரவேற்காமல் என் வேலையைத் தொடர்ந்து செய்து கொண்டிருந்தது அவனுக்குக் கோப மூட்டிவிட்டது. அதன் எதிரொலியாக "உன் போன்றவர்கள் தலையிலேயும் ஒரு நாளைக்கு கல் விழத்தான் போகிறது" என்று சபித்துவிட்டுப் பக்கத்தில் உடகார்ந்தான். ஏதடா தொந்தரவாகப் போய்விட்டதே என்று நினைத்துக் கொண்டு அவனுடன் பேச ஆரம்பித்தேன்.

"ஏண்டாப்பா! நீ உன்னைக் கம்பன், அவ்வை போன்ற "தெய்வீக" கவி என்று நினைத்துக் கொண்டிருக்கிறாயா? அவர்கள் தான் கல்லைக் காட்டி பொன் என்று பாடினால் பொன்னாகி விடும், பழைய சோறு சுடுகின்றது என்றால் ஆவி கிளம்பிவிடும் என்று கயவர்கள் கதை கட்டிவிட்டுவிட்டதை வைத்துக் கொண்டு என்னை பயமுறுத்தப் பார்க்கிறாயே! அதெல்லாம் ஒன்றும் நம்மிடம் நடக்காது" என்று எச்சரித்துவிட்டு, விஷயம் என்னப்பா! விளக்கமாகச் சொல் என்று கேட்டேன்.

அவன் என் கேள்விக்குச் சரியான விடை கொடுக்காமல் மீண்டும் "சட்டம் வருகிறது சட்டம்!" என்று கூறிவிட்டுச் சிரித்தான்.

'என்னாடாப்பா! சட்டம். சட்டம் என்று மிரட்டுகிறாய். சட்டம் என்றால் என்ன? புலியா—சிங்கமா அல்லது அறுபதடி வேங்கை என்று கதை அளக்கிறார்களே அதுவா? நம்மீது பாய்ந்து கொன்று நமது இரத்தத்தை உறிஞ்சிவிடுமா? அல்லது நம்மை அப்படியே தூக்கி விழுங்கிவிடுமா" என்று ஆத்திரத்தோடு கேட்டேன்.

'சட்டம்; சிங்கமும் புலியுமல்ல. நீ நினைப்பதைப்போல் வேங்கையும் வேழமும் அல்ல. ஆள்வந்திருக்கும் அநியாயக்காரர்கள்—அதிகார போதையில் மூழ்கி, நீதியைத் துச்சமென மதிக்கும் நெறி கெட்டவர்கள்-அநீதிக்கு பரிந்து பேசும் அக்கிரமக்காரர்கள்—நாட்டில் ஆட்சி மன்றமேறியிருக்கும் அதிகார வர்க்கம், திராவிடக் கழகத்தின் கொள்கைகள் நாட்டில் பரவுவதை தடை செய்யவதற்காக வீசும் அடக்குமுறை சட்டத்தைத்தான் குறிப்பிடுகிறேன்" என்று ஆத்திரத்தோடு கூறினான். மீண்டும் தொடர்ந்து பேசினான்.

'இதுபோன்ற சட்டங்களினால் நமது கொள்கை வளர்வதை தடை செய்யவோ, நமது உள்ளத்தை ஒடித்து உணர்ச்சியற்றவர்களாக்கி விடவோ முடியாது. கொஞ்சம் துயரத்தைக் கொடுத்து அமைதியைக் கெடுக்கும். சில நாட்களுக்கு சிறையில் தள்ளி பூட்டி வைத்திருக்கும். இல்வளவையும் எதிர்த்துப் போராடினால் கடைசியில் பணிந்துவிடும்" என்று ஒரு குட்டிப் பிரசங்கம் செய்ய ஆரம்பித்துவிட்டான். பிறகு என்ன நினைத்தானோ தெரியவில்லை; இதைச் சொன்னால் சட்டம் நம்மைத் துரத்தி வந்தாலும் வந்துவிடும் என்று சொல்லிவிட்டு எழுந்து நடையைக்கட்ட ஆரம்பித்தான். கூப்பிட்டேன். திரும்பிக்கூடப் பார்க்காமல் போய்விட்டான். உணர்ச்சி வயப்பட்ட அதிசயப் பிறவி!

அவன் பாடிக் கொண்டு வந்த பாட்டு மீண்டும் என் காதில் எதிரொலித்தது. அது யாப்பிலக்கண வரம்பிற்கு உட்பட்டிருக்கவில்லை என்றாலும், கொஞ்சம் அர்த்தமுள்ளதாகவே தென்பட்டது. என் சிந்தனையைத் தாண்டிவிட்டது.

அங்கு அலகாபாத் மாணவர் கூட்டமொன்றில் "எங்களை எவ்வளவுதான் வன்மையாகக் கண்டிக்கும் எந்த ஸ்தாபனத்தையும் நசுக்கும் எண்ணம் இந்திய சர்க்காருக்குக் கிடையாது. சர்க்காரையும் அதன் கொள்கைகளையும் கண்டித்துப் பேசுவதற்கு அனைவருக்கும் உரிமையுண்டு. என்னுடன் கருத்து வேற்றுமை ஏற்பட்டால் அதை எடுத்துக் கூறுவதற்கு மற்றவர்களுக்கு வாய்ப்பு அளிக்க வேண்டுமென்பதே என் அவா" என்று பண்டித நேரு சமீபத்தில் ஜனநாயக கீதம் பாடியிருக்கிறார். இது ஹிட்லர், முஸோலினி போன்றவர்களிடமிருந்து கற்றுக் கொண்டாரோ என்னவோ?

நேரு ஒரு சாதாரண மனிதரல்ல. தேசியவாதிகளுக்கு முடிசூடா மன்னன்! இந்திய உபகண்டத்தின் முதல் அமைச்சர். அவருடைய இந்தப் பேச்சுக்களை ஏந்திக் கொண்டு எண்ணற்ற ஏடுகள் உலகில் பல பாகங்களுக்கு ஓடுகின்றன. அவரது இந்தக் கருத்துக்கள் உலகெங்கும் ஒலிபரப்பப்படுகிறது. இதைக் காணும்

பிறநாட்டு அரசியல்வாதிகள் இந்தியாவில் ஜனநாயகம் நிலவுகிறது என்று கருதுகிறார்கள். அவர்கள் கருதுவது தவறென்று கூறமுடியாது. எண்ணத்தில் ஏமாளித்தனத்தை ஏற்படுத்துமளவுக்கு பிரச்சார பலம் இந்திய சர்க்காரிடம் இருக்கிறது.

இந்திய உபகண்டம் இருப்புத்திரையால் மறைக்கப்பட்டிருக்கும் இருள் சூழ்ந்த பிரதேசம். இங்கு நடக்கும் கொடுமையையும், அடக்குமுறை தர்பாரையும் உலகம் உணர்ந்து கொள்ள முடிவதில்லை. பசி, பட்டினியால் பரிதவிக்கும் ஏழை மக்களின் அழுகுரல் எந்த நாட்டிற்கும் எட்டுவதில்லை. உரிமை வேட்கை கொண்ட இனங்களின் கோரிக்கைகள் புறக்கணிக்கப்படுவதையும், எழுச்சி கொண்ட சமுதாயங்களின் விழிப்புணர்ச்சி நசுக்கப்படுவதையும், உரிமை வேண்டுமென்று குரல் எழுப்புபவர்கள் ஒழிக்கப்படுவதையும், குறிப்பாக திராவிட மக்களின் விடுதலை வேட்கையை ஒழிப்பதற்காக சென்னை அரசாங்கம் தொடுத்திருக்கும் அடக்குமுறை தர்பாரையும் உலக மக்கள் உணர முடியாதபடி இருட்டடைப்புச் செய்யப்பட்டு வருகிறது. இந்த ஆணவக்காரர்களின் செயல்களை வெளியுலகம் அறிந்து கொள்ள முடியாதபடி தடுத்து நிற்கும் இருப்புத்திரை இன்னும் எவ்வளவு நாட்களுக்கு நீடித்திருக்க முடியும்? ஏழையின் கண்ணீருக்கும், எழுச்சி கொண்ட திராவிட சமுதாயத்தின் விடுதலை கோரிக்கைக்கும் சரியான பரிகாரம் தேடப்படாதவரை, இன்று குமுறும் உள்ளங்களிலிருந்து கொந்தளித்து வெளிக்கிளம்பும் இதய ஒலியை எவராலும் அடக்க முடியாது—அடக்க முடிந்ததும் இல்லை. இதுதான் காலமும், வரலாறும் கற்பிக்கும் பாடம். திராவிடச் சமுதாயத்தின் இதய ஒலி—புரட்சி முரசு—உலக மக்களின் காதுகளில் விழக்கூடிய நாள் விரைந்து வந்து கொண்டிருக்கிறது. இதைத் தடுக்கும் அரசாங்கமும், அதற்குப் பக்கபலமாயிருக்கும் அடக்குமுறைச் சட்டங்களும் தூள் தூளாக முறிந்து விழத்தான் போகிறது.

அங்கு நேருவின் பேச்சுகளில் ஜனநாயகத் தத்துவங்கள் அழகாக விளக்கப்படுகின்றது; இங்குள்ள ஏமாளிகள் அதைக் காட்டி இந்தியாவில் ஜனநாயக ஆட்சி நிலவுகிறது என்று வாதாடுகிறார்கள். இதே நேரத்தில் சென்னை அரசாங்கம் மாற்றுக் கட்சியினரான திராவிடர் கழகத்தினர்களை அடக்கி, ஒடுக்கி, ஒழித்துக்கட்ட வீசுகின்ற அடக்குமுறைச் சட்டங்களைப் பார்த்தால் தெரியும் இங்கு நடைபெறுவது ஜனநாயகமா? அல்லது சர்வாதிகார ஆட்சியா என்பது.

ஜனநாயகத்தை சவக்குழியில் புதைத்துவிட்டு, மனிதனை உணர்ச்சியற்ற நடைப்பிணமாக்கி நாடாளும் பாசிச போக்கிற்கு பிறமாகாணங்களுக்கு வழிகாட்டும் "மகத்தான" காரியத்தில் சென்னை அரசாங்கம் முன் நிற்கிறது. இத்தனை நாட்களாக இல்லாத புதிய புதிய அடக்குமுறைச் சட்டங்கள் புற்றீசல்போல் கிளம்புகின்றது. அவை அனைத்தும் திராவிடர் கழக சம்பந்தப்பட்ட தனிமனிதர்கள் நெஞ்சில் நேருக்கு நேராக பாய்ச்சப்படுகிறது—விஷம் தடவிய கூர் அம்புகளைப்போல். இந்த அடக்குமுறை அம்பு எந்த நேரத்தில் யார் யார் மீது பாயப்போகிறதோ? இன்னும் கொஞ்ச நாட்களில் பத்திரிகைகளில் கட்டுரைகள் எழுதிக் கொண்டு வருபவர்களையும் பிடித்து "நீ ஏன் அப்படி எழுதினாய்" என்று கேட்டு அவர்கள் மீதும் பாய்ந்தாலும் பாயக்கூடும். எதுவரினும் வரட்டும். 'எதையும் தாங்க இந்த இதயமுண்டு' என்ற உறுதியோடு எதிர்த்து நிற்கிறோம்.

திராவிடர் கழகத்தினர் ஏடுகளில் குற்றமிருக்கிறது என்று அரசாங்கம் கூற ஆரம்பித்தது! இந்தக் கேலிக் கூத்தைக் கண்டு நாடு சிரித்தது. நமது பத்திரிகைகளுக்கு ஆயிரக்கணக்கான ரூபாய்கள் ஜாமீன் கேட்டார்கள். கட்டினோம்—கட்டிவிட்டு மீண்டும் நமது பணியைத் தொடர்ந்து நடத்துகிறோம். நமது எண்ணத்திலிருந்தும்—இலட்சியத்தின் அடிப்படையிலிருந்தும்-உருவான எண்ணற்ற எழுத்தோவியங்களுக்குத் தடைவிதிக்கப்பட்டு பறிமுதல் செய்யப்பட்டது. அரசாங்கத்தின் இந்தத் தவறான போக்கைக் கண்டு வருந்தினோம்—கண்டித்தோம்—திருந்துவார்கள் என்று எதிர்பார்த்தோம். ஆனால் அடக்குமுறை நாளுக்கு நாள் அதிகரிக்கிறது—இனியும் நாம் அடங்கிக்கிடப்பது ஆகாது. கொடுமை கோரச் சிரிப்போடு கூத்தாட ஆரம்பித்திருக்கிறது. இனியும் நாம் தயங்கிக் கொண்டிருப்பது சரியில்லை சட்டம் தனி மனிதனை நேருக்கு நேராகத் தாக்க ஆரம்பித்துவிட்டது—இனியும் நாம் தனித்தனியே சிதறுண்டு கிடப்போமானால் அரசாங்கத்தின் அடக்குமுறை வலுப்பெற இடமேற்பட்டுவிடும். திராவிட சமுதாயத்தின் இன உணர்ச்சியை அழிக்க அரசாங்கம் நேரிடையாக இறங்கிவிட்டது. இதை எதிர்த்துப் போராட-களம் நோக்கி முன்னேற இளைஞர் உலகம் துடிக்கின்றது. ஆனால் கட்சியில் ஏற்பட்டிருக்கிற 'ஒரு மாதிரி'யான நிலைமை எதையும் செய்ய இயலாத நிலையைக் கொண்டுவிடுகிறது. இந்த நேரத்தில் அபிப்பிராய பேதங்களைக் கொஞ்சம் ஒதுக்கி வைத்துவிட்டு பெரியாருடன் ஏனையோரும் ஒன்று சேர்ந்து ஒரு நல்ல முடிவை ஏற்படுத்திக் கொண்டு போராடத் திட்டம் தீட்டுவார்களாக!

நாம் எழுதிய புத்தகங்களுக்குத் தடைவிதித்த அரசாங்கம் அதை அச்சிட்டுக் கொடுத்த அச்சுக்கூடக்காரர்களிடம் ஜாமீன் தொகைகேட்க ஆரம்பித்தது. இதன் பின்னர் அச்சுக்கூடங்கள் நமது புத்தகங்களை அச்சிட பயந்து கொண்டு மறுக்கிறது. இவ்வளவு கொடுமையும் போதாதென்று புத்தகங்களை எழுதிய ஆசிரியர்களையே தங்களின் கோர பசிக்கு ஆளாக்கிக் கொள்ள சட்டம் ஆரம்பித்துவிட்டது. இந்தப் போக்கு இன்னும் என்னென்ன விபரீதமான செயல்களில் போய் முடியுமோ தெரியவில்லை. ஆயினும் அடக்குமுறை வெற்றிபெறாது தோல்வியைத்தான் அடையும் என்பதுமட்டும் உறுதி!

"இலட்சிய வரலாறு," "காந்தியார் சாந்தியடைய?" "அழியட்டுமே திராவிடம்" ஆகிய மூன்று நூல்களையும் எழுதிய அதனதன் ஆசிரியர்கள் மீது நடவடிக்கை எடுக்கும்படி அரசாங்கம் சட்டம் பிறப்பித்திருப்பதாக தெரிகிறது. இது எவ்வளவு கொடூரமானதும் பாசிச போக்குடையதுமாகும் என்பதை விளக்க வேண்டியதில்லை,

(தொடர்ச்சி 9ம் பக்கம் பார்க்க)

# சென்னை உலகம்.

★

[பஞ்சாப் தேச பக்தரும், சென்னைவாசிகளால் பெரிதும் "பாஞ்சால சிங்க" மென்றும், "பாஞ்சால தெய்வ" மென்றும் கொண்டாடப்படும்படியான பெரியாருமாகிய லாலா லஜபதிராய் அவர்கள் காலமாகுமுன், சென்னை மாகாணத்தைவந்து பார்த்துவிட்டுப் போன பிறகு, நமது 'தமிழ்நாட்டைப் பற்றித் "தியாகபூமி" யென்னும் பத்திரிகையில் வெளியிட்டுள்ள அபிப்பிராயம். இதனை மொழிபெயர்த்தவர் தோழர் பட்டாபி சீதாராமய்யர். நம் திராவிடநாட்டில் காங்கரஸ் தலைவர்களின் உண்மை யோக்கியதை இன்று எந்த அளவுக்கு இருக்கிறது? என்பதைக்காண இந்தக் கட்டுரை பெரிதும் துணைசெய்யும்.

ஆ—ர்]

"நான் இதற்குமுன் இரண்டொரு தடவை சென்னைக்குச் சென்றிருக்கின்றேன். ஆனாலும் சென்னையின் உண்மை நிலையை விசாரித்து அறிவதற்குப் போதிய சந்தர்ப்பம் அப்போது கிடைக்கவில்லை. இப்பொழுது நான் அறிந்தவற்றைத் தெரிவிக்கிறேன்.

வடஇந்தியாவில் இந்துமுஸ்லீம் கலவரங்களால் எப்படிமக்கள் பிரிவுபட்டுத் தொந்தரவுபட்டு வருகின்றார்களோ அதுபோலவே சென்னையில் பார்ப்பனர்-பார்ப்பனரல்லாதாரென்னும் சச்சரவால் பெரிதும் கலவரமேற்பட்டுத் தொந்தரவேற்பட்டிருகிறது. எந்த இடம் நமது பண்டைக் காலத்து நாகரீகத்தின் அறிகுறியும், இந்துமதத்தின் உண்மைத் தத்துவங்களும் ஒரு சிறிதுங்கூட காணப்படாமல் மறைபட்டுக்கிடக்குமோ அந்த இடத்திற்கு நிதர்சனமாகச் சென்னையைச் சொல்லலாகும்.

புராண காலத்தின் பெரியோர்களாகிய சங்கரர், மத்துவர், ராமானுஜர் ஆகிய மூவரும் சென்னையில் பிறந்தவர்கள். இச்சென்னை மாகாணம் அப் பெரியோர்களால் ஸ்தாபிக்கப்பட்ட இந்து நாகரீகத்தைப் பின்பற்றுவதாகச் சொல்லப்படுகிறது. ஆனால், நான் இச்சென்னையைப் பார்த்தவரையில் இந்து மதத்தின் பேரால் எந்தெந்த நடவடிக்கைகள் பழக்கவழக்கத்திலும் அமுலிலும் இருந்துவருகிறதாக அறிகிறேனோ அவைகள் ஒருக்காலமும் நம்மை சுயராச்சியத்திற்குச் செலுத்திக் கொண்டு போகமுடியாதென்று நிச்சயமாய்ச் சொல்லுவேன்.

சென்னையில் வேதாந்தமும் இந்து தத்துவ சாஸ்திரமும் வெகு உயர்ந்த நிலையிலிருக்கின்றன. ஆனால் அவற்றின் பிரயோகமும் பிரத்தியட்ச வாழ்வும் மிக மிக இழிவான நிலைமைக்குப் போய் விட்டன.

### ஆலயங்களின் ஆபாசம்.

சென்னையிலிருக்கும் கோவில்களின் கட்டட நிர்மாணங்களெல்லாம் ஆகமத்தின்படி மேலானவைகளாயிருந்த போதிலும் நடவடிக்கையில முழுதும் ஆபாசங்கள் நிறைந்த அடைப்புகளாகவே இருக்கின்றன. அவைகளின் நாலாபக்கங்களிலும் அநாச்சாரமும், அநாகரிகமுமான வாழ்வே காணப்படுகின்றன. சென்னை வாசிகளின் ஆங்கிலப்படிப்பானது அவர்களுடைய மேற்கண்ட கோட்பாடுகளையும், பழக்க வழக்கங்களையும் கொஞ்சமும் திருத்தமுடியவேயில்லை. அன்றியும் இவர்களுடைய வகுப்புச் சண்டையும், ஒருவரையொருவர் அளவுகடந்து வெறுப்பதையும் பார்த்து மிகவும் துக்கமுண்டாயிற்று.

சென்னை இந்துக்களை மூன்று பிரிவாகப் பிரிக்கலாம். அவையாவன:- பிராமணர்கள், பிராமணரல்லாதார்கள், தீண்டாதார்கள். சமீப காலம் வரையில் இந்த ராஜதானியின் இராச்சியாதிகாரங்கள் முழுவதையும் பிராமணர்கள் கைப்பற்றி இருந்து வந்ததாகத் தெரிகின்றது. அந்நிலைமையிலேற்பட்ட அதிருப்தியின் காரணமாகப் பிராமணரல்லாதாரில் ஒரு கட்சியார் "பிராமணரல்லாதார்" இயக்கத்தை ஆரம்பித்தார்கள். பிராமணர்களும் பிராமணரல்லாதார்களும் ஒருவரையொருவர் எதிர்ப்பதற்காகவே இரு கட்சிகளாகப் பிரிந்து கொண்டார்கள் என்று சொல்லலாம். ஆனாலும், இருவகுப்பாரும் ஒருவரையொருவர் பொதுவாகவே எதிர்த்துக் கொண்டிருக்கிறார்கள். சென்ற சிலகாலம்வரை காங்கிரசில் பிராமணராதிக்கம் இருந்தது. சமீபத்தில் நடந்த சட்டசபைத் தேர்தல்களில் காங்கிரஸ்காரர்கள் அநேக பிராமணரல்லாதார்களைத் தங்களுடன் சேர்த்துக் கொண்டார்கள். இதனால் சென்னை சட்டசபையில் காங்கிரஸ் பிராமணக் கட்சிக்கு மிகுந்த பலம் ஏற்பட்டுவிட்டது. ஆனாலும் சென்ற மாதத்தில் ஒவ்வொருவராக அந்தக் கட்சியை விட்டு நழுவி எதிர்க் கட்சியிலே சேர்ந்துகொண்டார்கள். அதனால் காங்கிரஸ் கட்சிக்கு மிகவும் கெடுதல் ஏற்பட்டிருக்கிறது.

சென்னையில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக்கு அதனுடைய கொள்கைகள் என்னவென்று நிர்ணயம் செய்வதே எனக்கு மிகவும் கஷ்டமாக விருக்கின்றது. சென்ற வருஷம் சென்னையில் கூடிய காங்கரஸ் கமிட்டியின் சார்பாக இரண்டு தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டன. அவைகளுக்கு, ஒருவரை விட ஒருவர் மேலென்று சொல்லும்படியாக வானத்தையளாவும் பெரிய பெரிய சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள். ஆனால் எந்தக் காங்கரஸ் கட்சியும் தற்சமயம் அவைகளை அனுஷ்டானத்திற்குக்கொண்டு வரவில்லை. சென்னைக் காங்கரஸ் கட்சியின் சக்தி இப்போது சின்னாபின்னப் படப் போகிறதென்பதில் ஆட்சேபணையில்லை.

### சீனிவாசய்யர் கவலை.

காங்கரஸ் கட்சியின் தலைவர் தோழர் சீனிவாசய்யங்காருடன் ஒருநாள் பேசிக்கொண்டிருந்தேன். அச்சமயம் வேறுசிலரும் பக்கத்திலிருந்தார்கள். அந்தச் சமயம் காங்கரசின் யோக்கிதையைச் சொல்லி எவ்வளவுதூரம் துக்கப்பட்டாரென்பதை இதில் எழுதுவது உசிதமாகத் தோன்றவில்லை. ஆனாலும் அவரே சமீபத்தில் ஒரு பிரசங்கத்தில் சென்னைக்காங்கரஸ் கட்சியின் அபிப்பிராயத்திலாவது செய்கையிலாவது ஒற்றுமை இல்லையென்றே வெளிப்படையாகச் சொல்லியிருக்கிறார். காங்கரஸ் கட்சியில் யார்யார் எவ்வெவ்வாறு அபிப்பிராயங்கள் கொண்டிருக்கி

(தொடர்ச்சி 12ம் பக்கம் பார்க்க)

# குடி அரசு

17—9—49 சனிக்கிழமை.


## அரங்கேற்ற நாடகம் ஏன்?

தென்னாடு வடநாட்டிற்கு அடிமைதானாம். நிரந்தர அடிமையாகவே இருந்துதீரவேண்டியதுதானாம். வடநாட்டு ஆதிக்க வெறியர்களின் ஆதிக்கத்திற்குத் தென்னாட்டிலிருந்து அவர்களால் பிடித்து வைக்கப்பட்டவர்கள் இதை பகிரங்கமாக ஒப்புக்கொண்டுவிட்டார்கள். சாஸ்வத அடிமை சாசனத்தில், அடிமைகளின் பிரதிநிதி எனக் கூறிக்கொண்டு வெளிப்படையாகக் கையொப்பமும் போட்டுவிட்டனர்.

பலநாட்களாய் அ. நி. சபையில் கடும் விவாதத்தில் இருந்து வந்ததுபோல் பேசப்பட்ட 'இந்தி' மொழிப் பிரச்னையானது, 'இந்தி' என்கிற ஒரு மொழி மட்டும்தான் இந்தத் தேசத்தில் உள்ள எல்லோராலும் பேசப்படவேண்டியமொழி (தேசிய மொழி) என்பதாக சட்ட அங்கீகாரம் பெற்றுவிட்டது இந்த மாதம் 14ம் தேதி. பரிதாபத்துக்குரிய செய்தி! திராவிடனின் ஜீவனில் கை வைத்துவிட்ட முயற்சி!

அ. நி. சபையில் 'இந்தி' பிரச்னை கடுமையான தகராறில் இருந்துகொண்டிருக்கிறது என்றுவந்த செய்தியெல்லாம் உண்மையில் ஒரு ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்ட — முன்னேற்பாட்டோடு கூடிய நாடகம்தானோ என்றுதான் எவரும் நினைக்கவேண்டியிருக்கிறது.

ஏனென்றால் அ. நி. சபையில் விவாதத்திற்கு உரியதாய் இருந்த பிரச்னை இந்தியும், இந்தியினும் பல மடங்கு சிறந்த வேறு எத்தனையோ மொழிகளும் இருக்கும் இந்த துணைக்கண்டத்தில், இந்தி ஒன்றுமட்டும்தான் தேசிய மொழியா? துணைக் கண்டத்தில் பேச்சு வழக்கில் இருக்கும் எல்லா மொழிகளும் தேசியமொழிகளா? என்பதாக இல்லை.

தேசிய மொழியை நிர்ணயிக்க வேண்டிய ஸ்தானத்தில் இருந்துகொண்டிருக்கிறோம் என்று சொல்லுகிறவர்கள், உண்மையாகவே அந்த ஸ்தானத்திற்குரியவர்கள் என்றால் அவர்களுடைய முதற் கவனம் தேசியமொழி என்பதற்கு என்ன அர்த்தம்? என்பதிலாவது ஈடுபட்டிருக்கவேண்டும்.

ஆனால் அ. நி. சபை நாடகக் குழுவினரில், இப்போது வேற்றுமை இருந்தது போல் நடித்துக் காட்டப்பட்ட பகுதி, இந்தி மொழி தெரியாத 20-கோடி பொது மக்களையும் ஏமாற்ற வேண்டும் என்கிற முன்னேற்பாட்டோடு செய்யப்பட்ட, ஒரு காட்சி, அல்லது அப்படிப்பட்ட ஒரு பலனைத்தான் கொடுத்திருக்கிறது.

இப்போதைய அ. நி. சபைக்கு, வடநாட்டுப் பணமூட்டைகளின் கருவியாயிருக்கும் காங்கரசினால், நியமிக்கப்பட்ட நியமன மெம்பர்கள்தான், உறுப்பினர்களாய் இருப்பவர்கள். இந்த உறுப்பினர்கள் எல்லாம் எப்போது அதற்கு உறுப்பினர்களாய் நியமிக்கப்பட்டார்களோ, அதற்குப் பல காலத்திற்கு முன்னால் இருந்தே 'இந்தி ஒன்றுதான் இந்தத் துணைக்கண்டத்திற்குத் தேசிய மொழி என்பதாக, வடநாட்டு ஆதிக்கத்தாரின் காங்கரசால் பலமாகப் பிரசாரம் செய்யப்பட்டு வந்திருக்கிறது. இதை ஒப்புக்கொண்டு, இந்தியைத்தான் தேசிய மொழியாக வைத்துக் கொள்ள வேண்டும் என்று பின் பாட்டுப் பாடியவர்கள் யாரோ, அப்பேர்ப்பட்டவர்களைத் தான், இந்தி மொழியறியாத நாடுகளிலிருந்து பொறுக்கி எடுத்து அ. நி. சபைக்கு நியமிக்கப்பட்டது.

இவ்வாறு முன்னாலேயே, மறைமுகமாக அடிமை சாசனத்தில் கையொப்பமிட்ட பேர்வழிகளை வைத்துக் கொண்டு நடிக்கப்படும் இந்த நாடகத்தில், நாடகமாய் இல்லாவிட்டால் வேற்றுமை—தகராறு என்பதற்கெல்லாம் எப்படி இடமிருக்க முடியும்?

குறிப்பாகத் தென்னாட்டுப் பிரதிநிதிகள் என்று வைக்கப்பட்டிருப்பவர்களைப் பார்ப்போம்.

தென்னாட்டில் என்றைக்கு சமஸ்கிருதம் பயின்றோர்க்கு ஆதிக்கம் ஏற்பட்டதோ அன்று தொட்டுத்தான், தென்னாடு சமூகம், அரசியல், பொருளாதாரம் ஆகிய அத்தனை துறைகளிலும் வீழ்ச்சியடைய தலைப்பட்டது. இந்த உண்மையை உணர்த்தும் வரலாறுகளும், இலக்கியங்களும் இன்றைக்கும் இந்த நாட்டில் மலிந்து காணப்படுகின்றன. இவ்வுண்மையைக் கண்டுணர முடியாத ஒரு பிரகிருதியை எப்படித் தென்னாட்டின் பிரதிநிதி என்று கருத முடியும்?

அ. நி. சபையில் அங்கம் வகிக்கும் தென்னாட்டுப் பிரதிநிதிகள் என்று சொல்லப்படுபவர்களில், இவ்வுண்மையை உணராதவர்கள் அறவே இல்லை என்பது நம்கருத்தல்ல. உண்மையை உணர்ந்தவர்களாய் ஓரிருவர் உண்டு. இன்னும் சொல்லப் போனல், ஒரு காலத்தில் பெருஞ் செல்வாக்கோடு இருந்தது என்று இப்போது பேசப்படுகிற, இறந்துபட்ட சமஸ்கிருதம் புழுத்த புழுக்களில் ஒன்றே இந்த இந்தி மொழி. சமஸ்கிருதத்தால் நாடு பெற்ற சீரழிவுக்குக் குறைபாதபடிதான் இந்திமொழி ஆதிக்கம் ஏற்பட்டாலும் உண்டாகும் என்கிறதான இந்த உண்மைகளையும் அறிந்தவர்கள்தான் அந்த ஓரிருவர். அப்படி உணர்ந்திருந்தும்தான் அடிமைச் சாசனத்தில் மறைமுகமாகக் கையெழுத்துப் போட்டவர்கள் இவர்கள்.

இப்படி ஏற்கனவே அடிமை முத்திரை குத்திக் கொண்ட இவர்கள், இப்போது வேற்றுமை—தகராறு என்று பேசியதெல்லாம், இந்தியை தேவநாகரி லிபியோடு (சமஸ்கிருத சார்பான எழுத்தோடு) ஒப்புக் கொள்ளுகிறோம். ஆனால் 1, 2, 3 என்று எழுதப்படுகின்ற எண்களை மட்டும், இந்தி மொழியில் உள்ள எழுத்தால் இல்லாமல், அனைத்துலக எண்களையே வைத்துக்கொள்ளவேண்டும் என்பதுதான்.

வேற்றுமைக்குக் காரணம்

அறக்கட்டளை

என்று சொல்லப்பட்ட இந்த எண் வடிவத்தின் பிரச்னை, அப்படியொன்றும் பிரமாதமானதில்லை. இருந்தாலும்கூட எவ்வளவு பிரமாதமாகக் காட்டமுடியுமோ அவ்வளவு பிரமாதமாக விளம்பரப்படுத்தப்பட்டது. மலை விழுங்கும் "மகாதேவனுக்கு" கதவு ஒரு அப்பளமாகத்தானிருக்க முடியும். இந்தி மொழியையே பயின்றுவிடுவோம் என்பவர்களுக்கு, பார்க்கப்போனால் இந்தி எண்கள் அப்படி ஒன்றும் கடினமானதில்லை. இந்தியின் ஆதிக்கம் இந்தத் துணைக்கண்டம் முழுவதும் பரவவேண்டும், இதன் வாயிலாக பனியாக்களின் ஏகாதிபத்தியம் இந்தத் துணைக்கண்டத்தில் நடைபெற வேண்டும் என்று கனவு காணும் வடநாட்டு இந்தி வெறியர்களை எடுத்துக்கொண்டாலும், இந்த எண் வடிவப் பிரச்னை அப்படி ஒன்றும் பிரமாதமானதில்லை. தலையும் உடம்பும் நுழைவதற்கு இடங்கொடுத்த பிறகு வாலைமட்டும்தானா நுழைத்துவிட முடியாது? இந்தியை ஒப்புக்கொண்ட, இன்னும் சில காலத்திற்குப் பின் இந்தி எண் வடிவங்களையும் நுழைத்துவிட முடியும் என்பதை அவர்களும் அறியாதவர்கள் அல்ல. எவருக்கும் விளங்காததுமல்ல. இருந்தும்கூட 'இரு தரப்பார்' என்று பேசப்பட்டு, இருதரப்பாருக்கும் கடுமையான விவாதம் என்று விளம்பரப்படுத்தப்பட்டு, இருதரப்பாருக்கும் வெற்றியான முறையில் சமாதானம் என்றும் பறைசாற்றப்பட்டு இருக்கிறது இப்போது.

15-ஆண்டு வரை ஆங்கிலம் இருந்துவருவது என்பதுபோல், 15-ஆண்டுவரை அனைத்துலக எண்களும் இருந்துவரும் பின்னர்............ பின்னர்...........? இதுதான் இப்போது சமாதானமாகியிருக்கும் இந்தி எண் வடிவப் பிரச்னை. இது யாருக்கு வெற்றி? இது எப்படி விவாதம்?

தென்னாட்டின் உயர்வை ஒழிக்க—மட்டந்தட்ட அந்தக் காலத்தில் வடநாட்டிலிருந்து ஒரு அகத்தியன் வந்தான் என்பது பழங்கதை. அகஸ்தியன் அழிந்தான். அவன் கட்டிய சமஸ்கிருதக் கோட்டையும் அழிந்தது என்று மீண்டும் வீறுடன் முழக்கும் இந்த நாட்டில், சில அகஸ்திய தாசர்கள் இங்கிருந்து பிடித்து வைக்கப்பட்டு, அவர்களின் துணையால் மீண்டும் சமஸ்கிருதத்தின் ஒரு பிள்ளை அரியாசனத்தில் ஏற்றி வைக்கப்படுகிறது. இந்த அரியாசனம் சரியாது என்பதுதான் அரியாசனம் அமைத்தோரின் எண்ணம். அகஸ்தியனும், அவன் கட்டிய கோட்டையுமே சரிந்துபோன இந்தத் துணைக் கண்டத்தில், அகஸ்தியதாசர்களின் அரியாசனம் எத்தனை நாளைக்கு?

தென்னாட்டிற்கும் வடநாட்டிற்கும் தீராத பகையுணர்ச்சிக்குத்தான் பலமாக வழிவகுக்கப்பட்டிருக்கிறது என்பதாகத்தான், இந்தி தேசிய மொழி என்கிற இந்த "அரங்கேற்றத்"தை நாம் கருதுகிறோம். எந்தக் காலத்திற்குமே தென்னாடும்—வடநாடும் சிநேக பாவ உணர்ச்சிகூட கொள்ள முடியாத நிலைமைக்குத்தான் இப்போது அஸ்திவாரம் போடப்பட்டிருக்கிறது என்பதாகத்தான் இந்த நாட்டுப் பாமரன் கருதமுடியும். இதனால் எவ்வளவு நஷ்டமடைந்தாலும், இந்த ஏற்பாட்டைத் தகர்த்தொழிக்க வேண்டியதுதான் தென்னாட்டவரின்—திராவிடரின் மானமுள்ள செயல் என்பதாகத்தான் திராவிடத்தின் இளைஞர்கள் எண்ணமுடியும். இவ்வாறு எண்ணும் உரிமையை எவ்வளவு பலம் வாய்ந்த ஏகாதிபத்திய வெறியர்கள்கூட பறித்துவிட முடியாது என்பதைத் தான் இவ்வுலக வரலாறுகளே எடுத்தியம்புகின்றன. அப்படியிருக்க இந்த அரங்கேற்ற நாடகம் ஏன்?

---

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த மூன்று நூல்களும் தடை செய்யப்பட்டவை. தடை விதித்ததோடு விடாமல் அதை எழுதியவர்கள் மீதும் நடவடிக்கை யெடுப்பதென்பது எவ்வளவு மோசமான செயல் என்பதையும், பொறாமையும், எதிர் கட்சியின் கருத்துகள் பரவுவதை தடுக்க வேண்டுமென்ற துவேஷ மனப்பான்மையும்கொண்டவர்கள், நிர்வாக இயந்திரத்தை மிக மிகத் தவறான வழியில் இயக்குவிக்கிறார்கள் என்பதும் தெளிவாக விளங்குகிறது. இந்த போக்கை வளரவிடுவது, வருங்காலத்தில் ரொம்பவும் ஆபத்தான செயலாக போய்விடும் என்பதை நாம் உணரவேண்டும்.

சர்க்காரின் இந்த உத்தரவில் ஒரு விசித்திரமான செயலையும் காணமுடிகிறது. அது மூன்றாவதாக குறிப்பிட்டுள்ள நூலை எழுதியவர் மீது நடவடிக்கை எடுக்க விரும்பியதுதான். புத்தகம் வெளிவந்து ஏறத்தாழ இரண்டாண்டுகள் ஆகிறது. புத்தகத்தை எழுதிய தோழர் இறந்து போய் ஒண்ணேகால் ஆண்டு ஆகிறது. இப்பொழுது அவர்மீது நடவடிக்கை எடுக்க சட்டம் வந்திருக்கிறது. இவ்வளவு விசித்திரமான சட்டத்தையும், சர்க்காரின் செயலையும் இதுவரையில் நான் கேள்விப்பட்டதேயில்லை. ஒருவர் இறந்துவிட்டால் அவர் வகிக்கும் ஸ்தானத்தின் பதவிகாலம் அன்றுடன் பூர்த்தியாகிறது" என்ற விதியொன்று அமெரிக்க அரசியல் அமைப்பில் இருப்பதாக ஏதோ புத்தகத்தில் படித்தேன். இது எனக்கு ஒரே ஆச்சரியமாக இருந்தது—உங்களுக்கும் அப்படித்தான் தோன்றும். ஏதாவது ஒரு சர்க்கார் உத்தியோகத்தில்-(ஏன், மந்திரிபதவியில் இருப்பவர் என்று வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளுங்கள்) இருப்பவர் இறந்துவிட்டால் அவர் மந்திரி பதவி அன்றுடன் பூர்த்தியாகிவிட்டது என்று தானேபொருள். இதற்கு எதற்கு அரசியல் அமைப்பில் விதியிருக்க வேண்டும் என்று தோன்றும்? ஆனால் இது ஒன்றும் ஆச்சரியமில்லை. சென்னை அரசாங்கம் இறந்த ஒருவர் மீது நடவடிக்கை எடுக்க சட்டம் பிறப்பிக்கிறதைவிடவா அது விசித்திரம். இது நிர்வாகத்தில் உள்ளவர்களின் ஊழலையும் கண் மூடித்தனத்தையும் காட்டவில்லையா? இந்த வெட்கக்கேடான உத்திரவை உடனடியாக அரசாங்கம் "வாபஸ்" வாங்கிக் கொள்ளும் என்று எதிர்பார்க்கிறேன்.

சென்னைமாகாண அதிகார வர்க்கமே! நீங்கள் என்றும் ஆட்சி பீடத்திலேயே இருந்துவிடுவோம் என்று நினைக்கிறீர்கள் போலும்! அல்லது அடக்குமுறை சட்டத்தையும் ஆயுத பலத்தையும் கொண்டு எதிர் கட்சியை ஒழித்துவிட்டு, காங்கரஸின் பெயர் கூறிக்கொண்டு என்றென்றும் ஆட்சி நடத்திவிடலாம் என்ன எண்ணு

இங்கர்சால் சொற்பொழிவு

# உண்மை.

தமிழாக்கம்: மா. சூ. நெடுஞ்சேரலாதன்.

(சென்ற இதழ் தொடர்ச்சி)

அது மனிதனை ஊர்ந்து, வளையுமாறு கேட்கவில்லை. அது அறியாமையின் வழிபாட்டை, வழுத்துதலை, பயந்தோர்களின் புகழுரையை விரும்பவில்லை. அது ஒவ்வொரு மனிதனையும் வேண்டிக் கொள்கிறது; நீயாகவே சிந்தனைசெய். ஒரு கடவுளைப் போன்று உரிமை கொண்டு மகிழ்ந்து; நேர்மையான கருத்தைக்கூற நன்மையும், வலிமையும் பெறமுற்படுவாயாக.

நாம் ஏன் உண்மையை கடைப்பிடிக்கவேண்டும்? நாம் ஏன் ஆராயவும், சிந்திக்கவும் வேண்டும்? நாம் ஏன் சிந்தனையில் நேர்மையாளராகவும், ஆதரவாளராகவும் இருக்கவேண்டும்? நாம் ஏன் உண்மையான கருத்தை கூறவேண்டும்? இவைகட்கெல்லாம் ஒரே ஒரு விடைதானுண்டு அது தான் மனித பண்பின் இலாபத்திற்காகும்.

மூளை வளர்ச்சியுற வேண்டும். உலகம் சிந்திக்கவேண்டும். பேச்சு உரிமை பெற்றாகவேண்டும். அறியாமை புனிதமல்ல, விடைகள் சிந்தனையை திருப்திப்படுத்தும் வரை கேள்விகளுக்கு பதிலிறுத்ததாகக் கொள்ளமுடியாது என்பதை உலகம் கற்கவேண்டும்.

இம்முறையால் மனிதன் பல இயற்கை தடைகளை மாற்றிவிடலாம். அவன் பல நோய்களை சுகப்படுத்தவும், வராது தடுக்கவும் முடியும். அவன் வலியை குறைத்துக் கொள்ளலாம். அவன் வாழ்க்கையை நீடித்ததாக்கவும், நேர்மையாக்கவும், வளப்படுத்தவும் முடியும். எல்லா திசைகளிலும் அவன் வன்மையை பெருக்கிக் கொள்ள முடியும். தன் தேவைகளை திருப்திப்படுத்தவும், சுவையைப் பண்படுத்திக் கொள்ளவும் அவனால்முடியும். அவன் உறையுளும், உடையும், உணவும், விறகும், மனையும், மகிழ்ச்சியும் தன்முயற்சியிலே பெற்றுக்கொள்வான்.

தேவைகளையும், குற்றங்களையும் இவ்வுலகினின்றும் அவனால் விரட்டமுடியும். பயமென்ற பாம்புகளை கொன்று, அறியாமை விலங்குகளையும் அவன் ஒழித்துக் கட்டுவான். அவன் அறிஞனாகவும், உரிமையுடையவனாகவும், நேர்மையாளனாகவும், பொறுமையாளனாகவும் மாறிவிடுவான்.

வானமண்டல அரசர்கள் முடி சாய்ந்து வீழ்வர்—நரகத்தின் எரி நெருப்பு அணைக்கப்பட்டு விடும். புனித பிச்சைக்காரர்கள் (குருக்கள்) நேர்மையான, பயனுள்ள மனிதர்களாக மாறுவர். கொடுமை பயத்தினிடமிருந்து எந்த பொம்மைகளையும் பெறமுடியாது, பொய்மை புனிதமாக்கப்படாது, இவ்வுலக வாழ்க்கை மற்றோர் உலகிற்காக அழிக்கப்படாது, மனிதர் கடவுளுக்கு பதிலாக மக்களை நேசிப்பர், மனிதன் மறு உலகில் மதிப்புப் பெறவேண்டும் என்பதற்காக நன்மை செய்யமாட்டான். ஆனால் இங்கு மகிழ்ச்சி எய்தவே நன்மை செய்வான். மனிதன் இயற்கை ஒன்றே கடவுள் அருளிய வாக்கென அறிவான். பின், தன் முயற்சியால், தாரகைக் கூட்டங்களும், மேகக் கூட்டங்களும், குன்றுகளும், மணலும், கடலும், புனலும், மழையும், நெருப்பும், செடியும், மலரும், உயிரின் நுண்ணிய பல உருவ தோற்றங்களும், எல்லா உலகப் பொருட்களும் வன்மைகளும் உரைக்கும் வரலாறுகளை கற்க முயலுவான்.

இவ்வரலாறுகளை — ஆதாரங்களை அவன் கற்கும்போது, மனிதன் தன்னம்பிக்கையால் தான் வாழ முடியுமென்றும்—கடவுள் என்ற ஒன்று இல்லையென்றும், மனிதன் மனிதனுக்காகவே வாழவேண்டுமென்றும் அறிந்து கொள்வான்.

உரிமையான சிந்தனைக்கெதிராக, தன்னம்பிக்கைக்கு எதிராக உள்ளத்தின்அழுக்கற்ற,கறையற்ற வன்மைக்கெதிராக வாதித்து முடிவுகட்ட முயல்வது முடியாத காரியமாகும்.

நான் கூறியவையெல்லாம் உண்மையாகத் தெரிகிறது, எல்லாம் சுய ஆதாரமானவை; எனினும் நீங்கள் கேட்கலாம், உரிமையை காட்டினும் அடிமை நன்று என்று கூறுவது யார்? என்று! அதை நான் கூறுகிறேன்.

எல்லா போப்புகளும், பாதிரிகளும், எல்லா ஆத்தீக ஆலயங்களும் மடாதிபதிகளும், தங்களிடம் கடவுளின் அருள் வாக்குண்டு என கூறுகின்றனர்.

புராடஸ்டண்ட்டுகள், ஒவ்வொரு மனிதனும் அருள் வாக்கை படித்து, புரிந்து கொண்டு, அதை நம்பவேண்டும்—மனிதன் சிந்தனையை பயன் படுத்தவேண்டும்; ஆனால் விவிலிய நூல் கடவுள் வாக்கல்ல என்று நேர்மையான முடிவிற்கு வந்து, தன் உள்ளத்தில் அதே முடிவோடு மடிவானானால், அவன் அழியாத் தண்டனைக்குட்படுவான் என்று கூறுகிறார்கள். ''படி'' பின் ''நம்பு'' ''அல்லது தண்டனைக்குட்படு'' என்று அவர்கள் கூறுகிறார்கள்.

---

கிறீர்களா? வேண்டாம் இந்த விபரீத போக்கு—விட்டு விடுங்கள்—திருந்துங்கள் என்று எச்சரிக்கை ஆசைப்படுகிறேன். இது ஜனநாயக யுகம்! இன்று இல்லாவிட்டாலும் நாளை நீங்கள் மக்கள் மன்றத்திற்கு வந்துதான் தீரவேண்டும். இன்று நீங்கள் இழைக்கும் கொடுமைகளுக்கும், செய்கின்ற அநீதிகளுக்கும் நாளை மக்கள் சமுதாயம் உங்களை பகுத்தறிவு மன்றத்தில் நிறுத்திவைத்து நல்லதோர் தீர்ப்பு வழங்கத்தான் போகிறது. இதிலிருந்து நீங்கள் விடுபட முடியாது. உங்களால் முடிந்தவரை அடக்குமுறை சட்டத்தை எங்கள் மீது அவிழ்த்து விடுங்கள். நானும் என் தோழர்களுக்கு முன் எச்சரிக்கையாக கூறுகிறேன். தோழர்களே! சட்டம் வருகிறது சட்டம் நம்மை சாய்த்து மடித்திட சர்க்கார் வீசிடும் அடக்குமுறை சட்டம், வருகிறது. அஞ்சாதீர்கள்—நெஞ்சைக் காட்டுங்கள் புறமுதுகு காட்டாதீர்கள்—எதிர்த்து நின்று போராடுங்கள்!

—''புத்ததாசன்''

"விவிலிய நூல் எத்துணைதான் உண்மை அற்றதாகத் தோற்றினும், நீ அதை நம்பித்தானாக வேண்டும். அதிசயங்கள் எத்துணைதான் முடியாததாகத் தோற்றினும், நீ நம்பித்தானாக வேண்டும். சட்டங்கள் எத்துணைதான் கொடூரமாக இருப்பினும், உன் உள்ளம் அதை அங்கீகரித்துத்தானாக வேண்டும்.''

இதைத்தான் சிந்தனையின் உரிமை என ஆலயங்கள் அறைகின்றன.

நாம் விவிலிய நூலை நேர்மையற்ற, பயத்தின் அடியிலிருந்து கொண்டு படித்தோம். அழிவிற்கான ஆயுதத்தோடு பேய் ஒரு பக்கம் இருக்கிறது. மற்றொரு பக்கம் கடவுள், அழியா கொடூரத் தண்டனையிலே தள்ள தயாராக இருக்கிறார். ஆலயங்கள் படிப்போர்க்கு உரைக்கின்றது; 'நீ உரிமையாக இருக்கின்றாய் எதையும் முடிவுகட்ட. கடவுள் நல்லவர் தேர்ந்தெடுக்க உனக்கு உரிமை கொடுத்திருக்கிறார்' என்று.

'விவிலிய நூலை நீங்கள் படிக்கத் தேவையில்லை. படித்தாலும் நீங்கள் அதைப் புரிந்து கொள்ள முடியாது. அதனால்தான் அது தெய்வ வாக்கு என்று கூறப்படுகிறது. உங்களுக்காக நாங்கள் அதைப் படிக்கிறோம்; ஆதலால் நாங்கள் கூறுவதை நீங்கள் நம்ப வேண்டும். நரகத்தின் சாவியை நாங்கள் வைத்திருக்கின்றோம். எங்கள் உரையை மறுத்தால் நீங்கள் தீராத குற்றவாளியாகக் கடவுளின் சிறையில் வைக்கப்படுவீர்கள்' என்று ஏழை மக்களிடம் (போப்புக்களும்) குருமார்களும், பாதிரிகளும் கூறுகின்றனர்.

இதுதான் கத்தோலிக்க ஆலயத்தின் உரிமையாகும்.

எல்லா பாதிரிகளும், மடாதிபதிகளும் விவிலிய நூல் மனித சிந்தனைக்கு மேற்பட்டது என்று நிர்ப்பந்தித்து—அதை ஒவ்வொருவரும் ஒப்புக் கொள்ள வேண்டும்—நம்ப வேண்டும் என்றும், உண்மையிலேயே அது உண்மையானது என்றோ, அல்லது உண்மையற்றது என்றோ எண்ணினாலும், சிறிதாகிலும் ஆதாரத்திற்கோ, சிந்தனைக்கோ ஒத்துவராவிட்டாலும் நம்பித்தானாக வேண்டும், அதுதான் மனித கடமை என்றும் உரைக்கின்றனர்.

உள்ளக் கோயிலினின்று சிந்தனை என்னும் தேவியை ஓட்டி நச்சரவம் போன்ற பயத்தின் முன் பணிந்து நிற்றல் அவரவர் கடமையாகும்.

இதைத்தான் ஆலயம் புனிதம் என்று கூறுகிறது.

இவ்விதமான கட்டுப்பாடுகளுடன் சிந்தனை யாது பலனளிக்கும்? மத்தியதரை வெப்பக் காற்றுப் போன்ற கடவுளின் தண்டனையால் சிந்தனை வீசிச் சென்று மூளையே பாலைவனமாக மாறிவிட்டது.

இதுமட்டுமல்ல. மனித சிந்தனையை பாலைவனமாக மாற்ற, ஆலயம் அழியா (நரகத்) தண்டனையை அந்த உலகில் இருப்பதாகக் காட்டி பயமுறுத்துவதோடு மட்டுமல்ல; அழியா ஆனந்தப் பரிசிலையும் வைத்துக் கொண்டுதான் ஆட்டிப் படைக்கின்றது.

யார் இவற்றை நம்புகின்றனரோ அவர்கட்கு முடிவிலா மேலுலக் மணத்தை வாக்களிக்கின்றது. அஞ்சச் செய்ய இயலாவிடின் இலஞ்சம் கொடுக்கின்றது. இவை பயத்திலும், நம்பிக்கையின் இழையிலும் தொக்கு நிற்கின்றது.

ஒரு மதம் அறிஞனை மதித்து உத்திரவிட வேண்டுமானால், அது நிர்ணயிக்கப்பட்ட உண்மையின் மேல் எழுப்பப்பட்ட மதமாக இருக்க வேண்டும். அது ஆசைக்கோ, அச்சத்துக்கோ, நம்பிக்கைக்கோ தலை சாய்க்கக் கூடாது. நீதிக்கு வாதிக்க வேண்டும். எல்லா எண்ணத்தின் திறனையும், எல்லா சிந்தனையையும், ஒன்று குழுமச் செப்பி, ஆங்கே அவைகளின் தேவைகளை, பொறாமை, பயமின்றி அமைதியான நாய வெண்ணுள்ளத்தோடு ஆராய்ந்து சோதித்தல் வேண்டும்.

ஆனால் ஆலயம் 'புனித ஏசு கிறிஸ்துவை நம்பு, நீங்கள் காப்பாற்றப்படுவீர்கள்' என்று அழுது வடிகின்றது. இந்த நம்பிக்கையின் மேல் மறு உலகமில்லை; மோட்சம் நம்பிக்கையின் பரிசில்.

நம்பிக்கை எப்போதும் ஆதாரத்தின் முடிவாக இருக்க வேண்டும். வாக்களிக்கப்பட்ட பரிசில் ஆதாரமாகாது. அது அறிவு ஒளி வீசியதாக ஆகாது. அது உண்மையை நிலை நாட்டியதாக ஆகாது. மறுப்பிற்கு விடை அளித்ததாக ஆகாது. அய்யத்தை நீக்கியதாகக் கொள்ள முடியாது

நம்பிக்கைக்குப் பரிசில் வழங்குவது நேர்மையாகுமா?

நீதிபதிக்கோ, மன்றக் காப்பாளருக்கோ, பொருள் கொடுத்து, தனக்குச் சாதகமாக முடிவையோ அல்லது தீர்ப்பையோ எதிர்பார்ப்பவன் குற்றத்தின் பொய்மையாளனாவான். ஏன்? ஏனெனில் அவன் நீதிபதியை, மன்றக் காப்பாளரை சட்டத்தின்படி, உண்மையின்படி, நேர்மையின்படி முடிவுகட்டத் தூண்டவில்லை. ஆனால் இலஞ்சத்திற்குத் தகுந்தபடி முடிவு கட்டத் தூண்டுகிறான்.

இலஞ்சம் ஆதாரமாகாது.

ஆகவே, நம்பினவர்கட்கு பரிசிலை வாக்குக் கொடுத்த கிறிஸ்துவின், பரிசில் ஒரு இலஞ்சமேயாகும். வாக்குறுதி ஆதாரத்தின் இடத்தைப் பிடித்துக் கொள்ளச் செய்யும் முயற்சியாகும் இது. வாக்குறுதிக்காகவென்று, எவனொருவன் நான் நம்புவதாக் கூறுகிறானோ அவன் தன் உள்ளத்தைப் பாழ்படுத்திக் கொள்பவனாவன்.

நிலத்தின் மத்தியில் நூறு மைல் அகல நீளமுள்ள ஒரு வைரம் இருப்பதாக நான் கூறுவதாக வைத்துக் கொள்வோம். அப்படி நான் கூறியதை நம்பும் எந்த மனிதனுக்காகிலும் பத்தாயிரம் டாலர்கள் (அமெரிக்க நாணயம்) கொடுப்பதாகவும் கூறுகிறேன். அப்படி நான் கொடுக்கும் வாக்குறுதியை ஆதாரமாகக் கொள்ள முடியுமா?

அறிவுள்ள மக்கள் பரிசிலைக் கேட்க மாட்டார்கள் ஆனால் சிந்தனையை கேட்பார்கள். நேர்மையற்றவர்கள்தான் பொருளைக் கேட்பார்கள்.

இருப்பினும் புது ஏற்பாட்டின்படி நம்பினவர்கட்கு கிறிஸ்து பரிசிலை வாக்கு அளிக்கின்றார். அந்த வாக்களிக்கப்பட்ட பரிசில் ஆதாரத்தின் இடத்தை பற்றி கொள்கிறது, கிறிஸ்து இவ்வாக்கை அளிக்கும்போது, நேர்மையான வீரம், உரிமை, இயற்கை, பண்புகளைக் கொண்ட உள்ளங்களை மறந்துவிட்டார், அறியாது போனார். அல்லது அறியத் தவறிவிட்டார்.

நம்பிக்கைக்காக மோட்ச பரிசில் வழங்குவது அறிவின் உரிமைக்கு ஒவ்வாது, அதை எந்த மனிதனும்

நம்பிக்கைக்கு ஆதாரமாக சிறிதாகினும் சம்பந்தப்படுத்த எண்ண முடியாது.

'ஒவ்வொரு பூசைநேரத்தும், நம்பிக்கையின் மூலமாக ஆத்மாவை காப்பாற்றிக் கொள்ளலாம்' என்று மக்களிடம் கூறப்படுவது ஒரு சிதைவேயாகும். அப்படிப்பட்ட பூசைகள் ஒழுக்க எண்ணத்தை குறைத்து, உண்மையான சிந்தனையின் புனிதத்தையும், கடமையையும் நீக்கி விடுகின்றது.

உண்மையான ஒரு மனிதனை, நம்பவேண்டும் என்று கேட்கும் போது அவன் ஆதாரத்தை கேட்டே தீருவான். உண்மையான ஒரு மனிதன், மற்றவர்களை நம்பக் கோரும் போதும் ஆதாரம் கொடுத்தே தீருவான்.

ஆனால் இது மட்டுமல்ல.

அழியா தண்டனை பயத்தை காட்டியும்—அழியா ஆனந்தம் வாக்களித்தும்—நம்பிக்கையற்றோர் அதிகரித்து, ஆலயங்களும் வேறு உருவம் பெற்று விட்டது.

நம்பிக்கையற்றோர்களை —நாத்திகர்களை நோக்கி ஆலயம் அறைகிறது:—'எம் கடவுள் அடுத்த உலகில் உம்மை அழைக்கவே திறந்திருக்கும் கதவு கொண்ட—அவர் சிறையிலே என்றும் தண்டனைக்குள்ளாக்கவாரெனினும், நம்பாதவரையிலே நாங்கள் உம்மை இங்கேயே இப்போதே தண்டிக்கப் போகிறோம்'.

பின்பு போப்புகளின், பாதிரிகளின், குருமார்களின் தலைமையில் ஆலைய உறுப்பினர்கள் நம்பிக்கையற்ற அடுத்தாரின் பட்டியலை ஆராய்ந்து அவர்களைச் சங்கிலியால் பிணைத்து, குகையில் அடைத்து, பரணையில் கட்டி இழுத்து, எலும்புகளை நொறுக்கி, நாக்கை அறுத்து, கண்ணை அவித்து, உயிரோடு கொளுத்தி அந்த ஏழைகளின் உடலைத், தீ நாக்குகளால் விழுங்கச் செய்தனர்.

(தொடரும்)

---

யாழ்ப்பாணத்தில்
நமது ஏஜண்டு.

தோழர் கோ. இராமசாமி,
தமிழ்ப்பண்ணை.

---

[7ம் பக்கத் தொடர்ச்சி]

றார்களோ, அவரவர்கள் அவ்வவ் வபிப்பிராயங்களைக் கொண்டு தங்களிஷ்டத்தை நிறைவேற்றிக்கொள்ளத் தனித்தனி கட்சி சேர்க்க வேண்டியிருக்கின்றது. மேலும் வெவ்வேறு அபிப்பிராய முள்ளவர்கள் ஒவ்வொருவரும் வெவ்வேறு கட்சி சேர்த்துக் கொண்டு தங்கள் தங்கள் அபிப்பிராயப்படி வேலை செய்யவேண்டும். அப்படியானால் தான் காரியம் நடைபெறுமென்று சொன்னார். ஆனால் என்னகாரியம் என்பதைப் பற்றி மாத்திரம் சொல்லவில்லை.

பொதுவாகத் தன்னெதிரில் மூன்று விஷயங்கள் இருக்கின்றனவென்று மட்டும் அவர் சொன்னார். அவற்றில் ஒன்று இந்தியாவின் முழுச்சுதந்திரம் என்றும், இரண்டாவது பொதுஜனங்களைத் தங்கள் கட்சியில் சேர்ப்பது என்றும், மூன்றாவது அவைகளுக்காகப் பணம் சேர்ப்பது என்றும் சொன்னார். கொஞ்சகாலமாக முழுச் சுதந்திரம் என்கின்ற பேய் சில இந்தியரைப்பிடித்திருக்கிறது. முழுச்சுதந்திரத்தையடைய ஒருவரும் இஷ்டமில்லை யென்று சொல்ல மாட்டார்கள். ஆனால் முழுச்சுதந்திரமோ அரைச்சுதந்திரமோ என்பவைகள் வெறும் வாய்ப்பேச்சுகளால் கிடைக்கக் கூடியவையல்ல. ஆனால் முழு அரசியல் வேலைகளின் அஸ்திவாரமே வெறும் வாயளப்பின் ஆதாரத்தின் மேலேயே நிற்கின்றது. வாலிபர்கள் மகாநாடுகளில் மேலும்மேலும் வார்த்தைகளைப் பேசுகிறார்கள். வயது முதிர்ந்த தலைவர்களின் மேல் அதிருப்தியைத் தெரிவிக்கிறார்கள். அரசாங்கத்திற்கு விரோதமாக வெகு ஆவேசமாய்ப் பேசுகிறார்கள். ஆனால் அவைகளை பதட்டத்தின் பைத்தியக்காரத்தனம் என்றுதான் சொல்ல வேண்டும். ஏனெனில் இம்மாதிரி ஆவேசமான வார்த்தைகளினால் இதுவரையில் எவ்விதமான பலனும் ஏற்பட்டதில்லை.

சாதாரணமாக மகாத்மா காந்தியின் சொற்படி மூன்று வேலைகளிருக்கின்றன. அவை அன்னிய துணி விலக்கு, தீண்டாமை ஒழித்தல், இந்து முஸ்லீம் ஒற்றுமை. இவற்றுள், சென்னையில் இந்து முஸ்லீம் வேற்றுமை அவ்வளவு கொடூரமான நிலையில் இல்லை. ஆனால் சென்னைத் தலைவர்கள் இதை ஒழுங்கு படுத்தப் பிரவேசித்ததின் பலனாய் வேற்றுமையை அதிகப்படுத்தி விட்டார்கள்.

அடுத்தபடியாகக் கதர் பிரசார வேலையை எடுத்துக்கொள்வோம். அது இப்போது காங்கரஸின் நேர்பார்வையிலில்லை. அதை மகாத்மா அவர்கள் அகிலபாரத சர்க்கார் சங்கத்தின் மூலமாக நடத்தி வருகிறார். தேச முழுவதிலும் இருநூற்றைம்பது கதர் பண்டகசாலை திறந்து வைத்திருக்கிறது.

### தீண்டாமை யொழிப்பு மோசடி!

மூன்றாவது விஷயம் தாழ்த்தப்பட்டவர்களுடையது. சென்னை காங்கரஸ் தலைவர்கள் இவ்விஷயத்தின் பக்கம் மறந்துகூடத் தலை வைத்துத் தூங்கவில்லையென்று தோன்றுகிறது. சென்னை காங்கரஸ் தலைவர்களுக்குள்ளாகவே இன்னமும் குருட்டு நம்பிக்கை இருந்து வருகிறது மல்லாமல் இந்து புராணங்களில் கற்பிக்கப்பட்ட எல்லா வேற்றுமைப் பாடுகளும் அவர்கள் உள்ளத்தில் இன்னமும் நிறைந்திருக்கின்றன. ஆதலால் அவர்கள் தங்கள் சமூக வாழ்க்கையைச் சீர்திருத்தும் பொருட்டாக ஒரு வேலையும் செய்வதே இல்லை. அன்றியும் தீண்டாமையை ஒழிப்பதன் பொருட்டு இந்த மாகாணத்தில் ஏதாவது வேலை நடந்திருந்தால் அது அவ்வளவும் வெளிமாகாணங்களிலிருந்து வரப்பட்ட பொருளுதவியால் நடந்து வருகிறது.

எல்லாவற்றிலும் இழிவான நிலை மலையாளத்தில் தீண்டாதார்களுடையது. நான் மலையாளத்தில் தீண்டாதார்களின் நிலையை அறிவதற்குச் சில நாட்கள் செலவிட்டேன். அவர்களின் நிலைமையையும், தீண்டாமையை ஒழிக்கவேண்டிய அவசியத்தையும் அவ்வேலையிலிருக்கும் கஷ்டத்தையும் நோக்கி மிக மிகத்துக்கித்தேன். அங்கு நான் எதைப் பார்த்தேனோ, எதைக்கேட்டேனோ அவைகளைப்பற்றி மற்றொரு வியாசத்தில் எழுதுகிறேன். ஆனால் இதை இங்கு சொல்லாமலிருக்க முடியாது.

(தொடரும்)

(4ம் பக்கத் தொடர்ச்சி)

ஊரின் எங்கோ ஒரு ஓரத்தில் ஓரிரு நாய்கள் ஓலமிட்டன. அதுவும்போதா தென்று அமைதியைக் கிழித்துக் கொண்டு கோட்டான்கள் அலறின. நுழைந்தான் கொல்லை வழியாக. சுற்றுமுற்றும் பார்த்தான். ஒருவரையும் காணோம். துணிந்தான். விரைந்தான். ஆனால்..........."அய்யோ! திருடன்!" என்ற 'அபாய அறிவிப்பும்' அதைத் தொடர்ந்து "தடால்' என்ற சத்தமும் கேட்டது. திரும்பினான் தேள் கொட்டியது போல. முதலியார்பிணமெனக் கிடந்தார் கீழே. என்ன நடந்தது என்று எண்ணுவதற்குள் தன்னை ஆட்கள் பிடித்துக் கொண்டதை உணர்ந்தான். என்ன செய்வது? புதுத் தொழில்!

போலீசுக்கு மறுநாள் காலை ஆள் அனுப்பப்பட்டது. எந்த நகையுமே தொட்டுப்பார்க்காத அவனது கைகள் இரும்பு விலங்குகளை ஆரத்தழுவின! தன் இருபக்கமும் போலீசார்வர, 'பவனி' வந்தான் கருப்பையா. தூரத்தில் சங்குச் சத்தம் கேட்டது. கவனித்தான். யாரோ நாலுபேர் மூங்கில் பாடை ஒன்றிலே பிணம்தூக்கி வருவது தெரிந்தது. நெருங்கநெருங்க ஏனோ இவன் இதயம் படபடவென அடித்தது? நெருங்கிற்று. "இந்தப் பிணம் அனாதைச் சவஅடக்கச் சங்கத்தாரால் அடக்கம் செய்ய எடுத்துச் செல்லப்படுகிறது" என்று ஒருபோர்டு அதில் கட்டப்பட்டிருந்தது. செத்த பிறகு ஆதரித்திடும் சென்மங்கள் தானே இவை! ஆம்! இதோ அருகில் வந்து விட்டது. ஆ! என்ன இது! "அம்மா!" என்று அலறிக் கொண்டே தரையில் விழுந்தான் கருப்பையா. பெற்ற தாயின் உயிர் பிரியும் நேரத்தில்கூட அருகில் இருக்க முடியவில்லை—அன்பிருந்தும்—அருமை மகனால். இறக்கும் போது என்ன கூறினாளோ? எப்படித்துடித்தாளோ?

*　　　*

"கருப்பையா எனப்படும் இவன் தான் திருடவந்தபோது, சத்தமிட்டு தன் திருட்டுக்கு இடையூறு செய்ய முற்பட்டார் என்ற காரணத்திற்காக முனுசாமி முதலியாரை அடித்து உயிரைப் போக்கி இருக்கிறான்...ஆகவே இந்தக் கொலைகாரனுக்கு ஆயுள் தண்டனை அளிக்கிறோம்" நீதிபதி கூறினார்—நெஞ்சு நெகிழவில்லை! உண்மை என்ன?—கக்கூசிலே இருந்த முதலியார் வெளியே வந்தார். கருப்பையா உள் நுழைந்தவுடன், தன்முன் ஆள் ஒருவன் போவதைக்கண்ட அவர், அவனைத் திருடன் என தீர் மானித்தவராய் உரக்கக்கத்தினார். பலஹீனமாயிருந்த அந்த நிலையில் பலமாகக் கத்தியதாலும், பயத்தாலும் அவரது இருதய ஓட்டம் நின்றது. உயிரற்ற பிணமெனக் கீழே விழுந்தார். சந்தர்ப்பம் சதிசெய்தது. கூண்டிலேற்றப்பட்டு குற்றவாளியாக்கப்பட்டான் கருப்பையா—சிறைக்கூடம் வரவேற்றது. சிறையினுள் கருப்பையா. உலகம் தன் போக்கில் பிறழவில்லை. நடந்தது வழக்கம் போல! உலக சுகங்களிலே ஒன்றுமறியாதவன்—ஒடுக்கப்பட்டவன்—நல்ல உணவு என்றால் என்ன என்ற நிலையினன்—மகிழ்ச்சி என்பது உலகிலேயே இன்னும் கண்டுபிடிக்கப்படாத ஒன்று என்ற எண்ணமுடையவன்—இன்பம் அனுபவிக்கத்தக்க இளைஞன்—முடமல்ல, முழுஉடலும் உடையோன்—ஆனால் இவ்வளவும் இருந்தும் அவன் தன் வாழ்வினில் எதைக் கண்டான்? மனிதன் தான் அவனும் எனினும் வாழ முடிந்ததா அவனால்? மனித இனம் உள்ளபடியே என்ன முன்னேற்றத்தைக் கண்டு விட்டது?

*　　　*

மீண்டும் 14 ஆண்டுகள் மறைந்தன. கருப்பையா சிறைசென்றபோதிருந்த குழந்தைகள்—இன்று இளைஞர்கள். இயற்கையும்கூட மாறி விட்டது போலத் தோன்றிற்று. வெளி உலகில் வெறுப்போடு நுழைந்தான் கருப்பையா—ஆம்! அவனை விடுதலை செய்துவிட்டனர். அப்போதும் மனிதர்களின் கருவிழிகள் அவனை மென்று விழுங்கிவிடுவதுபோல பார்ப்பதை உணர்ந்தான். கள்ளமார்க்கட்டிலே கொள்ளை லாபமடித்துவிட்டு அந்தப் பணத்திலேயே காளிக்குப் பாலபிஷேகம் செய்யும் பக்தர்களையும், அதையும் 'ஏற்றுக் கொண்டு விடும்' அந்தக் காளியையும் முறைத்துப் பார்க்காத அந்தக் கண்கள் அவனை மட்டும் முறைத்துப் பார்த்தன. அப்படி என்ன துரோகம் செய்துவிட்டான் அவன்?.........வெளியே வந்தவன் இந்த நிலையிலே வேலை தேட முடியுமா? வயிறு வளர்க்க வேறு வழி என்ன? எண்ணினான். மீண்டும் மீண்டும் சிந்தித்தான். அலைந்து திரிந்து அல்லல்படுவதை விட அதுவே நல்லது." மீண்டும் ஒரு முடிவு உதயமாயிற்று.

அடுத்த சில மணி நேரத்தில் இரும்புக் காப்புகள் கையை இறுக்க "மாமனார் வீடு" நோக்கி நடந்தான் பெருமிதம் கொண்டு.

அதே நீதி மன்றத்தில்—

நீதிபதி:-நேற்றுதானே நீ விடுதலை செய்யப்பட்டாய்?

"ஆமாங்க. நெசந்தானுங்க. இருந்தாலும் என்னாலே வெளிலே இருக்க முடியலீங்களே. சோத்துக்கும் வழியில்லை. வேலையும் கிடைக்காது. இந்தப் பாழும் மனுசனுங்க என்னெ

[3ம் பக்கத் தொடர்ச்சி]

பெண்கள், "ஆயாயா" (ஆயா+ஆயா) என்பதும் இரக்கம் குறிப்பதேயாகும். எனவே, அய்யர் என்னும் சொல் அய் என்னும் பகுதியடியாகப் பிறந்த தனித் தமிழ்ச் சொல்லேயாகும்.

பார்ப்பார்: பார்ப்பார் என்பது பார்ப்பான் என்னும் பெயரின் பன்மை. பார்ப்பனன் என்பதும் அது. பெண்பால் பார்ப்பாத்தி, பார்ப்பனத்தி, பார்ப்பனி. இது பார்ப்பு என்னும் பகுதியடியாகப் பிறந்த தனித்தமிழ்ப் பெயர். பார்ப்பு என்பது இளமை குறிக்கும் ஓர் உரிச்சொல். பார்ப்பு+ஆன்-பார்ப்பான். பார்ப்பு+ஆர்-பார்ப்பார். பார்ப்பு+அன்+அன்-பார்ப்பனன். அன்-சாரியை.

புதிதாக இல்லற நடத்தத் தொடங்கும் இளமணமக்களுக்கு வழிகாட்டவும், இல்லறம் நடத்துவதில் அவர்கட்குத் துணை செய்யவும், இல்லற நெறியினின்றும் வழுவாமல் அவர்களைப் பார்த்துக் கொள்ளவும் அவர்தம் பெற்றோரால் ஏற்படுத்தப்பட்டு அவ்வுதவித் தொழில் செய்பவனே பார்ப்பான் ஆவான். இவன் எப்போதும் தலைவன் கூடவே இருக்கும் பாங்கன் போலாது, வீட்டின் கண்

---

வாழவுடமாட்டாங்களே" என்று கருப்பன் கூறியிருக்க வேண்டும், ஆனால் அவன் கூறவில்லை. அவ்வளவு பயம் அவனுக்கு. மீண்டும் தன்னை வெளியே அனுப்பிவிடுகிறார்களோ என்று! குற்றத்தை ஒப்புக் கொண்டு தண்டனையும் ஏற்றான். அவனுக்கு அப்போது அளிக்கப்பட்ட 'வரவேற்பு' தான் தலைப்பில் தீட்டியது. மறுநாள் ஒரு செய்தித்தாளில் கீழ்கண்டவாறு இருந்தது.

### சிறைப் பறவை!

வளவனூர் ஜூலை 10.

14 ஆண்டுகள் ஒரு கொலைக் குற்றத்தில் தண்டனை விதிக்கப்பட்டு அதை அனுபவித்தபின் விடுதலை செய்யப்பெற்ற ஒரு கொலைகாரன் இன்று இவ்வூர் கோர்ட்டாரால் மீண்டும் 5 ஆண்டுக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டான். கருப்பையா எனப்படும் இந்தத் திருடன் விடுதலை செய்யப்பட்ட மறுநாளே போலீஸ் ஸ்டேஷனருகிலுள்ள ஒரு நகைக் கடையில் பல நகைகளைத் திருடினான் என்பது குற்றமாகும்.

—ம. துரைசாமி.

இருந்து வேண்டும்போது தலைவனுக்கு ஆவன கூறுபவனாவான். தலைவன் கூற்றைத் தலைவியிடமும் கூறுவான். இவன் நல்ல கல்வியறிவும் ஒழுக்கமும் உடையவனாவான். பார்ப்பான் என்பது இளமணமக்களுக்கு வாழ்க்கை முறைக்கு ஒத்த துணை செய்யுந் தொழிலாகும். இன்றும் சில செல்வக் குடும்பங்களில் இத்தொழில் நடந்து வருகிறது.

பண்டைக் காலந்தொட்டு உலக வழக்கில் பயின்று வந்த பொருள்களின் வழக்கியல் கூறும் மரபியலில் ஆசிரியர் தொல்காப்பியர், எல்லா வகைப் பறவைகளின் இளமைப் பெயரும் (மர—4), ஆமை, உடும்பு, முதலை, ஓந்தி, நண்டு முதலிய தவழ்வனவற்றின் இளமைபெயரும் (மர-5), குரங்கின் இளமைப் பெயரும் (மர—14) பார்ப்பு எனக் கூறுதலானும், 'புள்ளுங்குலம் பலவாகலான் இச்சூத்திரத்துள் அடங்கிய மரபு எத்துணையும் பல்வாதல் நோக்கி முதற் சூத்திரத்துட் பார்ப்பினை முற்கூறினானென்பது' (மர-4-பேரா), 'இதுவும் தவழுஞ் சாதிக்கெல்லாம் பொதுவாகிய பார்ப்புடைமையின் இரண்டாவது வைத்தானென்பது' (மர-5-பேரா), இவையெல்லாம் இக்காலத்து வழக்கினுள் அரியவாகலின் சான்றோர் செய்யுட்களுட் காணப்படும்' (மர-4-பேரா) என்னும் பேராசிரியர் கூற்றானும், தொல்காப்பியர்க்குப் பன்னெடுங் காலத்திற்கு முன்னரே பறப்பன, ஊர்வன முழுமைக்கும், சில நீர் வாழ்வன, விலங்குகட்கும் பார்ப்பு என்னும் பெயர் இளமைப் பொருள்பற்றி வழங்கி வந்திருக்கிறது என்பது வெளிப்படை.

"மேற்கவட் டிருந்த பார்ப்பினங்கள்" (அகம்—31)

"யாமைப் பார்ப்பி னன்ன" (குறுந்—152)

"தன் பார்ப்புத் தின்னும் அன்பில் முதலை" (அய்ங்—41)

"பார்ப்புடை மந்திய மலையிறந்தோரே" (குறுந்—278)

எனச்சங்க நூல்களில் பயின்று வருதல் காண்க. குழந்தைகளைப் பாப்பு, பாப்பா என்பது இன்றும் பெருவழக்காகவுள்ளது. இவை பார்ப்பு, பார்ப்பா என்பவற்றின் மரூஉவே யாகும். "ஓடிவிளையாடு பாப்பா" (பாரதியார்) என நூல் வழக்கிலும் புகுந்தன. பெரும்பாலும் இளம் பெண்களைப் 'பாப்பு, பாப்பாயா' என்னும் வழக்கும், பெண்களுக்குப் பாப்பம்மை, எனப் பெயரிட்டுப் பாப்பாத்தி எனக் கூப்பிடும் வழக்கும் இன்றும் நாட்டுப்புறங்களில் உண்டு. எனவே, பார்ப்பான் என்பது பார்ப்பு என்னும் இளமைப் பெயரினடியாகப் பிறந்த பெயரேயாகும் என்பதில் சிறிதும் அய்யப்பாடில்லை. பார்ப்பு என்னும் சொல் உரையாசிரியர்கள் காலத்தே (கி. பி. 10—13 நூ) வழக்கொழிந்து விட்டது.

பார்ப்பு என்பது வடமொழிச் சொல்லாயின் தமிழ் மக்களால் உயிர்வகைகளுக்கு இட்டு வழங்கியிருக்க முடியாது. அவ்வாறு வழங்கியிருப்பினும் இன்றுமேனும் பயின்று வழங்குமேயன்றி அருகியொழிதற்குக் காரணமில்லை. ஆகவே, அரசர் மனையினும் அரசர் போன்ற செல்வர் மனையினும் இளைஞர்களுக்கு உதவித் தொழில் புரிந்து வந்தவரே பார்ப்பார் ஆவர். அவர் வேளாளர் முதலிய பல வகுப்பினின்றும் பிரிந்தவராவர். பார்ப்பனர் என்பது வகுப்புப் பெயரல்ல. அரசியல் அலுவல் போன்றதொரு குடும்பத் தொழிலே பார்ப்பனத் தொழிலாகும்.

முதன்முதல் தமிழகம் வந்த வடவாரியர்கள் தவக்கோலத்தினராய் வந்தனர். அவர்கள் தமிழ் அந்தணர்களையடுத்துத் தமிழ்கற்றும், அவர்களோடு பழகியும், ஆரியக்கொள்கைகளை அவர்க்குரைத்தும் வந்தனர். நாளடைவில் அன்னார் தொகைபெருகி அவர்கட்கும் அந்தணர் என்னும் பெயர் வழங்கலானது. முடிவில் அவர்கள் ஆசிரியராகவும், அமைச்சர்களாகவும், புரோகிதர்களாகவும் அமர்ந்து அந்தணர் என்னும் பெயரை நிலையாகப் பெற்றனர். வரவரத் தமிழ்த்துறவிகளுக்கு அந்தணர் என்னும் பெயர் வழங்குதல் ஒழிந்தது. பட்டினத்தார், தாயுமானவர், இராமலிங்கர், மறைமலையடிகள் போன்ற தமிழந்தணர்கள் அந்தணராக முடியவில்லை.

முதல் முதல் இங்கு வந்த ஆரியக் குடும்பத் தலைவர்கள் மிக்க வெண்ணிற முடையராயிருந்ததாலும்மிகப் பணிவாக நடந்து கொண்டதாலும் தமிழ் அரசர்களும், செல்வர்களும் அவர்களைப் பார்ப்பனத் தொழிலிலமர்த்தினர். நாளடைவில் அவர்களே அத்தொழிலைக் கைக் கொண்டனர். பின்னர்த் தமிழர்கள் பார்ப்பனத் தொழிலுக்குத் தகுதியற்றவராயினர்; அத்தொழில் கிடைப்பதரிதாயிற்று. தமிழந்தணரோடு கூடி வாழ்ந்ததாலும், ஆசிரியத் தொழிலை மேற்கொண்டதாலும் அய்யரென்னும் பெயரும் அவர்க்கு வழங்கலாயிற்று. முடிவில், அந்தணர், அய்யர், பார்ப்பார் என்னும் மூன்று பெயர்களும் ஆரியர்க்குரிமையாயின. அந்தணர், பார்ப்பார் என்னும் இரு பெயரும் தமிழர்களைவிட்டே நீங்கின. அவை தமிழ்ப் பெயர், தமிழர் பெயர் என்பதே தமிழர்களுக்குத் தெரியா நிலையை அடைந்தன. அந்தணர் என்னும் சொல் பிராமணர் என்னும் வடசொல்லின் மொழிபெயர்ப்பெனக் கொள்ளப்பட்டது. அந்தணர் என்பது ஆரியர் பெருமைப் பெயராயது. அய்யர் என்னும் பெயர் பலவகைப் பார்ப்பனருக்கும் பொதுப் பெயராயிற்று. பார்ப்பார் என்னும் பெயர் குலப்பெயராயிற்று. முதலில் தமிழகம் வந்த ஆரியக் குடும்பத் தலைவர்களில் பெரும்பாலார் பார்ப்பனத்தொழிலே செய்து வந்ததால் அதுகுலப்பெயரானது. சங்ககாலத்திலேயே பார்ப்பனத் தொழிலை அவர்கள் பறித்துக் கொண்டமை குறுந்தொகை 156 வது பாட்டால் தெரிகிறது. இன்றும் சில செல்வத் தமிழ்க் குடும்பங்களில் பார்ப்பனர் பார்ப்பனத்தொழில் செய்து வருகின்றனர்.

தொழில்: 'அறுவகைப் பட்ட பார்ப்பனப் பக்கமும்' (புறத்-20) என்னும் புறத்திணையியல் சூத்திரத்தில் பார்ப்பார் முதலியவர்களின் தொழில் கூறப்படுகிறது. அதுவாகைத்திணை. ஒவ்வொருவரும் தத்தம் தொழிலைப்பற்றிச் சிறப்பித்துக் கூறுவது வாகைத் திணையாகும். எனவே அவரவர் முதன்மையான தொழில்களைச் சிறப்பித்துக் கூறுவதே இச்சூத்திரமாகும்.

உரையாசிரியர்கள் பார்ப்பனர் என்பதை ஆரிய முனிவர் எனக் கொண்டு, அந்தணர்—ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல்என்றும், அரசர்க்கு" ஓதல், வேட்டல், ஈதல், காத்தல்,

நூலக அறக்கட்டளை

தண்டஞ்செய்தல் என்றும், வணிகர்க்கு—ஓதல், வேட்டல், ஈதல், உழவு, நிரையோம்பல், வாணிகம் என்றும், வேளாளர்க்கு—வேத மொழிந்தன ஓதல், ஈதல், உழவு, நிரையோம்பல், வாணிகம், வழிபாடு என்றும் கூறியுள்ளனர்.

ஆசிரியர் தமிழர்கள் தொழிலைக் கூறப்புகுந்தாரேயன்றி வடவர் தொழிலைக் கூறப்புகவில்லை. தொல்காப்பியர் காலத்திற்குமுன் ஆரியர் நூல் வழக்கெய்தும் சிறப்புப் பெறவில்லை. வணிகர்க்கு உழவும், வேளாளர்க்கு வழிபாடும் தமிழ்க் கொள்கையன்று. வேத மொழிந்தன என்பதிலிருந்தே இது தமிழ் மரபல்லவென்பது வெளிப்படை.

"அறுவகைப் பட்ட
பார்ப்பனப் பக்கமும்,
ஐவகை மரபின் அரசர்
பக்கமும்,
இரு மூன்று மரபின் ஏனோர்
பக்கமும்,

என்னும் சூத்திர பொருளாவது, பார்ப்பாரின் அறுவகைத் தொழில்—1. காமநிலை யுரைத்தல், 2. தேர்நிலை யுரைத்தல், 3 கிழவோன் குறிப் பெடுத்துரைத்தல், 4. ஆவொடு பட்ட நிமித்தங்கூறல், 5. செலவுறுவித்தல், 6. செலவழுங்குவித்தல் (கற்—36) என்பன.

1. காமநிலையுரைத்தல்—தலைவனது காமமிகுதிகண்டு அது தகாதென மறுத்துக் கூறுதல். களவுக் காலத்தில் மிக்ககாமந் தீதெனவும், கற்புக்காலத்தில் காதலுடன் இருத்தல் நன்றெனவும் கூறுதல். 2. தேர்நிலை யுரைத்தல்—தான் சொல்வதைத் தலைவன் நம்புமாறு காரணமும், எடுத்துக் காட்டுங்கூறுதல். 3. கிழவோன் குறிப்பினை எடுத்தனர் மொழிதல்—தலைவனது புறத்தொழுக்கத்தை அவன் குறிப்பால் அறிந்து கூறுதல்; தலைவன் தலைவியை விட்டுப் பிறரறியாமல் பரத்தையரிடம் போய் வருதலைக் குறிப்பால் அறிந்து அது தகாதெனத் தடுத்துக் கூறுதல். 4. ஆவொடுபட்ட நிமித்தங்கூறல்—கற்றா கலநிறையப் பால்சொரிதலானும், குறைதலானும் உண்டாகும் குறிப்புப் பற்றி நன்மை தீமை கூறுதல். நிமித்தம்—சகுனம். மாடு சாணிபோடுதல், சிறுநீர் பெய்தலினால் அறிந்து கூறுதலுமாம். இது இன்றும் வழக்கிலுள்ளது. 5. செலவுறுகிளவி—இப்போது செல்லுதல நன்றெனக் கூறுதல் காலவியல்பையும், தலைவியின் பிரிவாற்றுதலையும் அறிந்து கூறுதல். 6. செலவழுங்குகிளவி—இப்போது செல்லுதல் தீதெனக் கூறிச் செல்லாமல் தடுத்தல். காலவியல்பையும், தலைவியின் ஆற்றாமையையும் அறிந்து தடுத்தல். அழுங்குதல்—செல்லாமலிருத்தல். அழுங்குவித்தல்—செல்லாமல் தடுத்தல். இவையே பார்ப்பனத் தொழில்களாகும். வேளாளர் முதலியோர்க்குரிய பொதுத் தொழில் பயின்று பார்ப்பனத் தொழில் செய்யப் புகுந்தபின் ஏற்பட்ட பெயரே பார்ப்பனராகையால் ஓதல் முதலிய தொழில்கள் விலக்கல்ல.

(தொடரும்)

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கட்டவேண்டிய பகுதிப் பணங்களைச் சரிவரக்கட்டி வருகிறார்களா? பொக்கிஷம் நிறைந்துள்ளதா? பொக்கிஷக் கணக்குகளை அவ்வப்போது பரிசோதித்து வருகிறீர்களா?

மந்:- பிரபோ! சிற்றரசர்களின் கப்பங்கள் தடையின்றி வந்துசேர்கின்றன. பொக்கிஷத்திற்போதிய திரவியம் இருக்கிறது. பொக்கிஷக் கணக்குகளும் சரியாய் இருக்கின்றன.

அர:- நமது நாட்டில் உள்ள தர்ம சத்திரங்களில் எல்லாம், விதிப்படி பிராமண போஜனம் நடந்து வருகிறதா?

மந்:- ஹிமோத்கிரி முதற்கொண்டு, கன்னியாகுமரிவரையுள்ள தங்கள் நாட்டில் ஆங்காங்கு ஏற்பட்டுள்ள சத்திரங்களில் எல்லாம் அரசிறைப்பணத்தில், அந்தணாளர்களுக்குத் தேவையான எல்லாம் குறைவின்றி அளிக்கப்பட்டு வருவதாக ஆங்காங்குள்ள மாகாணத் தலைவர்கள் தினந்தினம் அறிக்கை செய்து வருகின்றனர். இது விஷயத்தில் அசிரத்தை காட்டுபவர்களைக் குறித்து அவ்வப்போது கண்டிப்பான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. ஆகையால் பிராமணோத்தமர்களுக்கு யாதொரு குறைவும் நேர்வதில்லை மஹாராஜ்!

அர:- வைசியர்கள் தங்கள் குல நீதிப்படி தங்கள் கடமைகளைச் செய்து வருகின்றனரா?

மந்:- வைசிய ஜாதியார் எல்லோரும் தங்கள் நீதிக்குட்பட்டுக் குல தருமங்களைக் கடைப்பிடித்து நடந்து வருகின்றனர்.

அர:- நான்காம் வருணத்தோராகிய சூத்திரர்கள் தங்கள் ஜாதித் தர்மப்படி மற்ற மூன்று வருணத்தவர்களுக்கும் வேண்டிய ஊழியங்களைச் செய்து வருகின்றனரா?

மந்:- அவ்வாறே நடந்து வருகின்றனர். ஆனால் சிற்சில இடங்களில் மட்டும் ஒரு சிலர் முணுமுணுத்துக் கொண்டிருக்கின்றனர். மிலேச்சர்கள் அரசாட்சியில் எல்லோரும் சமம் என்று செய்து வந்த வழக்கத்தினால் இம்மாதிரி சிலர் பேசி வருகின்றனர். நாளடைவில் நமது பிராசீன தர்மம் பிரகாசிக்கப் பிரகாசிக்க எல்லாம் சரிப்பட்டு விடும் மஹாராஜ்!

அர:- சந்தோஷம். மந்திரிகளே! வாழ்க வந்தணர் வாழ்க வந்தணர் வானவர் ஆனினம்......

அச்சமயம் உள்நாட்டு மந்திரி எழுந்து "மஹாராஜ்! இப்பொழுது தான் தென்னாட்டில் நமது சிற்றரசர் சத்திய மூர்த்தியாரிடமிருந்து ஒரு தூதன் மிக முக்கியமானதும், அவசரமானதுமான தகவல்களைக் கொண்டுவந்து சேர்ந்திருக்கிறான். அவற்றைக் கேட்டருள வேண்டும்.

அர:- நீரே விஷயத்தைச் சீக்கிரம் சொல்லும்.

உ. நா. மந்:- நமது தர்மராஜ்ய ஆதிபத்தியத்தைத் தேச மஹா ஜனங்கள் எல்லோரும், சந்தோஷமாக வரவேற்கிறார்கள். ஆனால் தென்னாட்டில் மட்டும் சில இராக்ஷச வார்சுகள் தங்கள் அரசாட்சிக்கு உட்படுவதில்லையென்றும், தர்மராஜ்யத்தை வெறுப்பதாகவும், நமது சட்ட திட்டங்களுக்குப் பணிவதில்லையென்றும் பகிரங்கமாகச் சொல்லிக்கொண்டு தென்னாட்டு ஜனங்களிடம் ராஜத்துவேஷப் பிரசங்கங்களைச் செய்து கொண்டு வேதத்தையும் மதத்தையும், நீதி சாஸ்திரங்களையும் நிந்தித்து ஜனங்களை அராஜகத்திலும், நாஸ்திகத்திலும் செலுத்தி வருகின்றனர்.

அர:- ஆ! அவ்வளவு தைரியமா அவர்களுக்கு!

உ. நா. மந்:- ஆம் மகராஜ்! அவ்வசுரப்படை நாளுக்குநாள் பெருகி வருவதாகவும், அவர்களின் தலைவர்கள் எதற்கும் அஞ்சாத வீர

மும் உடையவர்களென்றும், அவர்கள் செய்கிற ஆட்டூழியங்களை ஆஸ்திக ஜனங்களாகிய சனாதனிகளும், முக்கியமாகத் தேவர்களும் பூசுரர்களும் சகிக்க முடியாமல் தர்மராஜ்ய பூபதியாகிய ராமராஜாவிடம் சரண்புகுவதாகத் தெரிவிக்கிறதாகவும், சிஷ்டர்களாகிய சற்ஜனர்களைக் காப்பாற்றி ரட்சிக்க முன் வரவேண்டுமென்று கோருவதாகவும் நமது சிற்றரசர் தெரிவிக்கின்றார்.

அர:- அப்படியானால் நாம் செய்ய வேண்டியதென்ன? மந்திரி பிரதானிகளே, சபையோர்களே இவ்விஷயத்தில் உங்கள் கருத்தைத் தெரிவிக்கக் கோருகிறேன்.

மந்:- மகராஜ்! இந்த ராட்சதக் கூட்டத்தை வளரவிட்டால் நமது ராஜ்பத்திற்கே ஆபத்து வரும் என்பதில் சந்தேகமில்லை. ஆகையால் இவ்வசுரர்களையும், அவர்கள் தலைவர்களையும் முதலில் அழித்து ஒழிக்க வேண்டியது நமது கடமை. துஷ்டர்களை சம்ஹாரம் செய்வது ராஜ தர்மமும் ஆகும். தென்னாட்டில் நமது சிற்றரசரிடத்திலுள்ள சேனையால் இந்த ராட்சசப் படையுடன் போர் செய்து ஜயிக்க முடியாது. ஆகையால் இங்கிருந்து ஒரு சைன்யத்தை நமது வீரர் சேனாதிபதி சர்தார்சிங் தலைமையின் கீழ் உடனே அனுப்பி வைக்க வேண்டும் மகராஜ்!

அர:- ஆம், அது நல்ல யோசனைதான். அப்படியே செய்வோம். இன்னும் இரண்டு தினங்களில் தர்ம ரட்சண்ய சேனையுடன் சர்தார்சிங் இங்கிருந்து புறப்பட்டுள்ளார் என்றும், ஒன்றுக்கும் அஞ்ச வேண்டாம் என்றும், நமது சிற்றரசருக்குத் தேர்தல் சொல்லித் தென்னாட்டுத் தூதனை இப்போதே அனுப்பி வைக்க வேண்டியது. குருதேவ் இந்த ராட்சசர்களை யழிக்க இன்னும் என்ன முயற்சியெடுத்துக் கொள்ள வேண்டும். அதையும் தெரிவிக்கக் கோருகிறேன்.

குருதேவ்:- அரசே, சேனையை அனுப்பி நமது ராணுவப்பலத்தைக் கொண்டு துஷ்டர்களாகிய அவ்வசுர கூட்டத்தை அறவே ஒழித்து விடுவதுதான் சரியான முறை. என்றாலும் உலக நிந்தனை ஏற்படாதபடி, சில முறைகளைக் கையாள வேண்டும். ராக்ஷசர் செய்யும் குற்றங்களை நமது தர்பாரில் விசாரித்து அவர்கள் பேரில் ஏற்படும் குற்றங்களையும், அக்குற்றங்களுக்குத் தர்மசாஸ்திரங்களில் விதிக்கப்படும் தண்டனைகளையும், நாடெங்கும் விளம்பரப்படுத்தவேண்டும். இவ்விஷயமாக நான் மந்திரிகளுடன் கலந்து யோசித்து ஒரு அறிக்கையைத் தயாரித்திருக்கிறேன். அந்த அறிக்கையை உள்நாட்டு மந்திரி இப்போது சமூகத்தில் வாசித்துக் காட்டுவர். பின் இதை தேசத்தில் உள்ள பத்திரிகைகளில் எல்லாம் பிரசுரிக்கப்படும்.

உ. நா. மந்:- அரசே! நமது குருதேவருடைய யோசனையின்படி தயாரித்திருக்கும் அறிக்கையாவது:—

“வேத சம்மதமாகவும், கடவுள் சம்மதமாகவும் ஸ்தாபிக்கப்பட்ட நமது தர்ம ராஜ்பத்திற்கும், நமது தேசப் பிராசின தர்மத்திற்கும், வருணாசிரம தர்மத்திற்கும், எதிரிடையாகப் பிரசாரஞ் செய்து, தேவர்களுக்கும், பூசுராகளுக்கும் வேத வேள்விகளுக்கும் விரோதமாக ஜனங்களை கிளப்பிவிட்டு, நாட்டில் குழப்பஞ் செய்து கொண்டு நாள் தோறும் பிரம்மத் துரோகம், ராஜத்துரோகம், தேசத் துரோகம், தர்மத் துரோகம் முதலான குற்றங்களைச் செய்து கொண்டும், நமது சத்பிரஜைகளாகிய சனாதனிகளையும், வர்ணாஸ்ரமிகளையும் சதா இழிவுபடுத்தியும், இம்சித்தும் வருவதாகத் தென்னாட்டில் உள்ள நமது சிற்றரசர் அறிக்கை செய்வதாலும், மேற்படி குற்றங்கள் முற்றிலும் உண்மையென்று நமது குருதேவர்களும், ரிஷீஸ்வரர்களும், மந்திரி பிரதானிகளும், சமஸ்தான புரோகிதர்கள், ஜோஸ்யர்கள், நிமித்திகர்கள், ஒற்றர்கள் முதலானவர்களால் ருசுப்படுத்தப்படுவதாலும், கீழ்கண்ட அரக்கர்களுக்குத் தர்மசாஸ்திரங்களில் கூறியபடி கீழ்க்கண்ட தண்டனைகள் விதிக்கப்பட்டிருக்கின்றன. இவர்கள் எல்லோரும் இன்று முதல் தர்மராஜ்ய பிரஷ்டர்கள் ஆவார்கள். இவ்வரக்கர்களுக்காவது, இவர்களைச் சேர்ந்தவர்களுக்காவது நமது நாட்டில் உள்ள பிரஜைகள் ஒருவரும் யாதொரு சகாயமும் செய்யக் கூடாது. இது அரசன் ஆணை. தர்மராஜ்ய விரோதிகளான அரக்கர்களை அழிப்பதற்கு ஒத்தாசை புரியும் நமது பிரஜைகளுக்கு அவரவர் சேவைக்குத் தக்கபடி சன்மானம் செய்யப்படும். தேசவிரோதிகளென்று பிரஷ்டம் செய்யப்பட்ட அரக்கர்களைப்பற்றிய விபரமும் அவர்கள் ஒவ்வொருவரையும் வீழ்த்துபவர்களுக்கு ஏற்படுத்தியுள்ள சன்மானங்களையும் கீழே குறிப்பிட்டிருக்கிறோம்.

அரக்கர் சேனாதிபதிகளை அழித்துக் கொல்பவர்களுக்கு அய்யாயிரம் பொன்னும், பத்துக் கிராம ஜாகீரும், அப்ஸர நாட்டுக் கன்னியர்களில் ஒருத்தியும், தர்மராஜ்ய சேனையில் சேனாதிபத்யமும் வழங்கப்படும். மற்றுமுள்ள ராட்சதப் படைத்தலைவர்கள், தலைவிகளைப் பற்றிய விபரங்களையும் அவர்களை அடக்குவதற்கு ஏற்படுத்தப்பட்ட சன்மானங்களையும் எல்லாக் கொத்தவால் சாவடிகளிலும் கண்டு கொள்க.”

மகராஜ்! இந்த அறிக்கையை இன்றே நாடெங்கும் விளம்பரஞ் செய்ய வேண்டும். உத்திரவு கொடுப்பீராக.

அர:- சபாஷ் மந்திரி! நீர் வாசித்த இவ்வறிக்கையை நாம் மனமுவந்து அங்கீகரிக்கின்றோம். நமது தர்ம ராஜ்ய பாதுகாப்புக்காக நமது குருமஹராஜ் செய்துள்ள யோசனைகள் எல்லாம் நமக்குச் சம்மதமேயாகும்.

அரசன் தன் அங்கீகாரத்தைத் தெரிவித்ததும் சபையோர் எல்லோரும் ஜபகோஷம் செய்தனர். தேவர்கள் பூமாரி பெய்தனர். அந்தணர் ஆசி கூறினர்.

கைலாயமலை மூலிகை.
(ரிஜிஸ்தர் செய்யப்பட்டது)

எல்லாவிதமான ஆஸ்துமாவையும் 6—10—49 சரத்பௌர்ணமியன்று சாப்பிட்டால் குணப்படுத்த வல்லது. ஆங்கிலத்திலாவது இந்தியிலாவது உடனே எழுதுக!

Brahmachari G. Das,
Sri Sidh Bramacharya,
Sewa Ashram,
P. O. Chitrokot (U. P.)

அச்சிட்டு வெளியிடும் ஆசிரியர்
என். கரிவரதசாமி. தமிழன் அச்சகம்.
59. கச்சேரி வீதி, ஈரோடு.